பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2048 | கார்த்திகை 04 | திங்கட்கிழமை 20.11.2017 | கதிர் 15

## 11 முதல் 14 வரை வேட்பு மனு ஏற்பு

உள்ளூராட்சிசபைத்தேர்தலுக்கானவேட்புமனுவைஅடுத்தமாதம் 11 ஆம் திகதி முதல் ஏற்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி

பக்கம் 18 »

### தமிழர் தாயகம் எங்கும்

# மாவீரர் வார நினைவேந்தல் நாளை எழுச்சியுடன் ஆரம்பம்



**யாழ்ப்பாணம், நவம்பர் 20**
**தாயக விடுதலைக்காகத்தமது இன்னுயிரை ஈந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வார நினைவேந்தல் நிகழ்வுகள்நாளைசெவ்வாய்க்கிழமை தமிழர் தாயகப் பகுதிகளிலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின்றன.**

பக்கம் 18 »

### வாள்வெட்டுத் தாக்குதல்கள்:

## இரு நாள்களில் மட்டும் 41 பேர் யாழ்ப்பாணத்தில் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 20
யாழ்ப்பாணக் குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்றவாள்வெட்டுச் சம்பவங்களை அடுத்து, கடந்த இரண்டு நாள்களாகமேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில்41சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குண

பக்கம் 18 »

## யாழ். நகருக்குக் கஞ்சாவை கடத்திய ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், நவ. 20
வடமராட்சி கிழக்கிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்குக் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து 2 லட்சம் ரூபா பெறுமதியான 2 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. அவர் கஞ்சாவைப்புத்தகப்பையிலிட்டு மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை கோப்பாய் பொலிஸ் பிரிவில்

பக்கம் 18 »

## மின்னல் தாக்கிச் சிறுவன் சாவு; மன்னாரில் நேற்றுப் பரிதாபம்

மன்னார், நவ. 20
மன்னார்செட்டியார்கட்டை யடம்பன் பகுதியில் வயல் வெளியில் சென்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவன் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளான்.

இந்தச்சம்பவம்நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மழை பெய்து கொண்டிருந்தவேளை மன்னார் செட்டியார்கட்டையடம்பனைச் சேர்ந்த நித்தியா

பக்கம் 18 »

## பிணைமுறி விசாரணைக் குழு முன் இன்று ஆஜராகின்றார் பிரதமர்

### அவரின் சாட்சியத்தை சட்டமா அதிபரே நெறிப்படுத்துவார்

கொழும்பு, நவ.20
மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணைமுறி விடயத்தில் சாட்சியம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதற்காக இன்று ஆணைக்குழுமுன்ஆஜரா

பக்கம் 18 »

## கல்வி அமைச்சருடன் இப்போது சுமுக உறவு

### கூறுகிறார் இராதாகிருஷ்ணன்



கொழும்பு, நவ. 20
கல்வி அமைச்சில் கடந்த காலமாக நிலவிய அதிகாரப் பகிர்வு தொடர்பான பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளதாகக்கல்வி இராஜாங்க அமைச்சர்வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மாத்தளை ஹாமீனா தேசியகல்லூரியில்நேற்று

பக்கம் 18 »

## வடக்கு முதலமைச்சர் போன்று அனைவரும் ஒத்துழையுங்கள்

### மாகாண அமைச்சர்களிடம் கோருகிறார் எஸ்.பி.



கொழும்பு, நவ. 20
இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதியும் அரசும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு வடக்கு மாகாண சபையின் ஒத்துழைப்பு அவசியம். வடக்கின் முதலமைச்சரைப் போன்று மாகாண அமைச்சர்களும் அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க வலியுறுத்தினார்.

பத்தரமுல்லையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பக்கம் 18 »

## தேசியக்கொடி விவகாரத்தில் சர்வேஸ்வரன் எதிர்ப்பை வேறுவிதத்தில் காட்டியிருக்கலாம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆலோசனை



யாழ்ப்பாணம்,நவ.20
தேசியக் கொடியை ஏற்றமாட்டேன் என வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் மறுத்தமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை குறித்துக் கேட்ட போது கருத்து வெளியிட்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தமது எதிர்ப்பை 'அவர் வேறு வழியில் காட்டியிருக்கலாம்

பக்கம் 18 »

## காலி வன்முறைகள் தொடர்பில் அரசு பாரபட்சமற்ற விசாரணை

### ஜிந்தோட்டைக்கு நேரில் சென்று ரணில் உறுதி



கொழும்பு, நவ. 20
காலி – ஜிந்தோட்டைப் பகுதியில் முஸ்லிம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தொடர்பில் அரசு பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொள்

பக்கம் 18 »

## இடைக்கால அறிக்கையில் தமிழர்களுக்கு ஏதும் இல்லையா? அது குறித்து முதல்வருடனும் விவாதிக்க சுமந்திரன் தயாராம்!

### நேற்று மட்டக்களப்பில் அவரே தெரிவிப்பு




மட்டக்களப்பு,நவ.20
புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் தமிழர்களுக்கு எதுவும் இல்லை என்று கூறுபவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் அமைச்சர்களாக இருந்தாலும்அவர்களுடன் நேரடியாக விவாதிப்பதற்குத் தாம் தயாராக இருக்கிறார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புமாவட்டமுன்னாள் நாடாளுமன்ற

பக்கம் 18 »

# கேவலம், ஒரு கட்சியை ஏற்படுத்தி அதற்கு தலைமை வகிக்கும் தேவை விக்கிக்கு இல்லை

## அவரே அதனைக் கூறுகிறார்



கேவலம், ஒரு கட்சியை ஏற்படுத்தி அதற்குத் தலைமை வகிக்கும் தேவையோ மத்திய அரசின் அமைச்சர் பதவியைப் வெறும் தேவையோ தமக்கு இல்லை என்று தெரிவித்திருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்களுடன் தாம் ஏன் முரண்படுகின்றார் என்பதையும் விளக்கியுள்ளார்.

வாராந்தம் தாம் அனுப்பும் கேள்வி – பதில் பகுதியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்த வாரத்துக்குரிய அவரின் கேள்வி – பதில் விடயம் வருமாறு:–

கேள்வி: தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் படாதபாடுபடுகையில் அண்மையில் அரசியலுக்கு வந்த நீங்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றமையைப் பலரும் விமர்சனஞ் செய்கின்றார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து போகாமல் – அவர்களின் செயற்பாடுகளுக்கு முரண்பாடாக – நடக்கின்றமை எதற்காக?

### வேண்டா வெறுப்பாக அரசியலுக்கு வந்தேன்

பதில் : ஒன்றை நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். விக்னேஸ்வரனுக்கு ஏற்கனவே பெயர், புகழ், பணம், கல்வி, அந்தஸ்து, நல்ல மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் என்று எல்லாவற்றையும் தந்து வைத்துவிட்டான் இறைவன். கேவலம் ஒரு கட்சியை ஏற்படுத்தி அதில் தலைமைப் பதவி வகிக்கவோ, ஒரு மத்திய அரசின் அமைச்சர் பதவி பெறவோ விக்னேஸ்வரனுக்குத் தேவையில்லை. அவற்றில் அவனுக்கு நாட்டமும் இல்லை. வேண்டா வெறுப்பாக அரசியலுக்கு வந்தவன் அவன். தலைமைத்துவத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதில் அவனுக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. இறைவன் அருளாலும் குருவின் ஆசியாலும் அண்மைக் காலங்களில் அவன் மனதில் குரோதம், பொறாமை, கோபம் போன்ற குணங்கள் தங்கியிருக்க மறுத்துவிட்டன. எதிரிகளையும் சேர்த்து எல்லோர் மீதும் உண்மையான அன்பு பாராட்டக்கூடிய ஒரு நிலையை இறைவன் அவனுக்கு அளித்துள்ளான். முன்னைய பிரதம நீதியரசர் ஸ்ரீபவன், நாடாளுமன்ற அங்கத்தவர் சுமந்திரன், சட்டத்தரணி புவிதரன் போன்றவர்கள் தனது மாணாக்களர்வார்கள் என்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டவன். தன் சகோதரர்கள் போலவே அவர்களை அன்புடன் நோக்குகின்றான். ஆகவே, எவரையும் பகைமை பாராட்ட வேண்டிய அவசியம் அவனுக்கில்லை.

பின் எதற்காக விக்னேஸ்வரன் கருத்துக்கள் முரண்பாடாக அமைந்துள்ளன என்று கேட்டால் ஒரு விடயத்தை பரிசீலித்துப்பார்க்கும்போது அதனை ஆதியோடந்தமாக – ஒரு சரித்திர ரீதியாக – பார்க்கும் ஒரு பாங்கை அவனுக்கு இறைவன் கொடுத்துள்ளான். நீதியரசராக இருந்த போது அந்தப் பாங்கு உறுதுணையாக அமைந்தது.

இப்பொழும் அப்படித்தான். தமிழர்கள் பிரச்சினை எங்கு தொடங்கியது? எப்போது தொடங்கியது? ஏன் தொடங்கியது? எவ்வாறான ஒரு பாதையில் இதுவரை பயணித்துள்ளது? – என்பவற்றைப் பார்த்தவுடன் புரிந்து கொள்ளும் ஆற்றல் அவனுக்குத் தரப்பட்டுள்ளது என்றே நான் கருதுகின்றேன். அந்த அடிப்படையில் சிந்தித்ததில் சில அடிப்படை உரிமைகளை நாங்கள் பெறாவிட்டால் எமது இனம் விரைவில் இலங்கையில் மறைந்து போகப்போவது திண்ணம் என்ற எண்ணம் என்னிடம் மேலோங்கியுள்ளது.

### சரி எனப்பட்டதை கூறுகிறேன்

ஆகவே நான் எதைச் சரியென்று அடையாளம் காண்கின்றேனோ அதனைக் கூறிவருகின்றேன். தமிழர் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை இக்கட்டினுள் இட்டுச் செல்லும் எண்ணம் எனக்கு இம்மியளவும் கிடையாது. அவர்கள் எடுக்கும் பாதை பிழையான சேரிடத்திற்குச் செல்லப் போகின்றது என்பதை அறிந்தும், அதனைத் தடுக்காது விட்டால் எம் யாவரினதும் பயணம் எமக்கு அழிவையே நல்கும். பாதையைச் சீர்செய்து பயணியுங்கள் என்று மட்டுமே நான் கூறிவருகின்றேன். பலர் என்னைப் போன்றே அதனைக் காண்கின்றார்கள். ஆனால், சிலர் தாம் போகும் பாதையே சரி என்று பயனற்ற பாதையில் பயணஞ்செய்யப் பார்க்கின்றார்கள். இது தான் முரண்பாட்டின் காரணம். முரண்பாட்டிற்கு நான் காரணமல்லன்.

சிலர் நினைக்கின்றார்கள் முன்னைய தமிழ்த் தலைவர்கள் தாயகம், சுயநிர்ணயம், வடக்கு – கிழக்கு இணைப்பு, சமஷ்டி என்றெல்லாம் கூறி வைத்துச் சென்றமை ஏதோ தான்தோன்றித்தனமான பிதற்றல்கள் என்றும் இன்றைய நிலையில் அவை ஒன்றும் கிடைக்காது என்றும் அதனால் கிடைத்ததை அல்லது கிடைப்பதைத் தக்கவைக்க வேண்டும் என்றும் –

மேலும், ஏதோ வழியில் வாழ்ந்துவிட்டுப் போகலாம்; பணம், பதவி, அதிகாரம், சொகுசு வாழ்க்கை இவைதான் முக்கியம் என்று நினைக்கின்றார்கள். அரசு தருவதை எடுத்து சந்தோஷமாக இருப்பதை விட்டுவிட்டு, வீணாகச் சமஷ்டி, அது, இது என்று கூறிக் கொண்டு தமது நடவடிக்கைகளுக்கு நாம் முட்டுக்கட்டையாக இருக்கிறோம் என்று கூறுகின்றார்கள்.

தாயகம், சுயநிர்ணயம், வடக்கு கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்ற கருத்துக்கள் கொழும்பிலும் தெற்கிலும் வாழும் போது தேவையற்றனவாகத்தான் கருதப்படுகின்றன. ஆனால், வடக்கு – கிழக்கில் அந்தக் கருத்துக்கள் மிக முக்கியமானவை. அவற்றின் தாற்பரியத்தை – தேவையை – தத்துவத்தை – வடக்கு – கிழக்கு மக்கள் முற்றாக அறிந்துள்ளார்கள்.

### தாயகம் ஏன்?

தாயகம் என்றால் இலங்கைத் தமிழர்கள் காலாதிகாலமாக 'தமது நிலம்' என்று அடையாளப்படுத்தி வந்த நிலம். தாயகம் எனக் கூறப்படும் நிலம்தான் ஓர் இனத்தை அடையாளம் காட்டுகின்றது. உணர்வால் – உணர்ச்சிகளால் – எம் மக்களை ஒன்று சேர்க்கின்றது. எமது நிலம் இல்லை என்றால் எமது அடையாளம் இல்லை. அவ்வாறான எமது தாயக நிலத்தினுள் தற்போது இராணுவத்தினரும் தெற்கில் இருந்துகொண்டு வரப்பட்ட குடியேற்ற வாசிகளும், பிறநாட்டு, தென்னாட்டு முதலீட்டாளர்கள் எனப் பலரும் குடியேறி உள்ளார்கள். அவர்கள் வாழ்க்கையை நோக்கும் விதம் வேறு. எமது பாரம்பரியங்கள் வேறு. எமது தாயகத்தை அடையாளப்படுத்திப் பாதுகாக்காவிட்டால் எமது பாரம்பரியம் அழியும்; பண்பாடு அழியும்; விழுமியங்கள் விலைபோகும். ஆகவேதான் தாயகத்தை எமது தானையோர் தாயினும் மேலாகக் கருதினர்.

## கூட்டமைப்புத் தலைவர்களுடன் முரண்பாடு ஏன் என்பதையும் அவர் விளக்குகின்றார்

அடுத்து வடக்கு – கிழக்கு இணைப்பு தாயகத்துடன் சேர்ந்தது இது. முஸ்லிம் மக்களுள் இரு வகையினர் உள்ளார்கள். தென்னிந்தியாவில் இருந்து மரக் கலங்களில் வந்து இங்கு குடியேறியவர்கள். மத்திய கிழக்கில் இருந்து வந்து குடியேறியவர்கள். தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள் பலர் தமிழ்ப் பாரம்பரியங்களில் திளைத்தவர்கள். அவர்கள் முதலில் தமிழர்; அடுத்து இஸ்லாமியர்கள். ஆனால், அடுத்த பிரிவைச் சேர்ந்தவர்கள் தமது மதத்திற்கு முதல் இடம் கொடுக்கின்றமை மட்டுமல்லாமல் தம்மை வேறொரு இனமாக அடையாளப்படுத்தி வருகின்றார்கள். அவர்கள் தான் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்ப்பவர்கள். அவர்கள் அவ்வாறு எதிர்த்தாலும் அவர்களின் மொழிப் பற்றின் நிமித்தம் வடக்கு – கிழக்கானது தமிழ்ப் பேசும் மாநிலங்கள் என்ற கருத்தை ஏற்றே உள்ளனர்.

எனவே, தமிழ்ப்பேசும் கிழக்கு மாகாணத்தினுள் சமச்சீர்மையற்ற (Asymmetrical) ஓர் அலகை முஸ்லிம் மக்கள் பெற்றால் வடக்கு கிழக்கு இணைப்பை ஏற்க அவர்களுள் பலர் முன்வந்துள்ளார்கள். பிற மாநிலங்களில் இருந்து வந்துள்ள முஸ்லிம் தலைவர்கள் வடக்கு – கிழக்கின் இணைப்பை ஏற்காதமை தமது மாநிலங்களில் அவர்களுக்கு வாக்கு கிடைக்காது போய்விடும் என்பதாலேயே.

### கிழக்கு நிலைமை

கிழக்கு தற்போது தமிழர்களிடம் இருந்து பறிபோய்விட்டது என்பது உண்மை. அதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், வடக்கு – கிழக்கு இணைப்பைக் கைவிட்டால் நாம் எஞ்சிய கிழக்கு மாகாணத் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தவர்களாவோம். ஒரு சிங்கள பௌத்த பிக்குவிடம் போய் உதவி கேட்கும் அளவுக்கு அவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அரசியல்வாதிகளின் புறக்கணிப்பின் நிமித்தம் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தமிழர் தாயகம் பாதுகாக்கப்படுவதன் அவசியம் போன்றே வடக்கு கிழக்கு இணைப்பும் அத்தியாவசியமாகின்றது.

இணைப்பின்றேல் தமிழினம் மறைந்து போகும் நிலை ஏற்பட வாய்ப்பிருக்கின்றது. மத ரீதியாக, சமூக ரீதியாக, தொழில் ரீதியாக, கல்வி ரீதியாக, அரசியல் ரீதியாக கிழக்கு மாகாணத் தமிழர்கள் இப்போது தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

ஆகவே, எமது கிழக்குச் சகோதர, சகோதரிகளைப் பாதுகாக்க வடக்கு – கிழக்கு இணைப்பு அத்தியாவசியமாகின்றது. பேரினவாதம் தொடர்ந்தும் தலைகாட்டாமல் இருக்க வடக்கு கிழக்கு இணைப்பு அத்தியாவசியமாகின்றது. தமிழ் – முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்த வடக்கு கிழக்கு இணைப்பு அத்தியாவசியமாகின்றது. இதைத் தெரிந்துதான் சிங்களத் தலைவர்கள் வடக்கு – கிழக்கு இணைப்பை எதிர்க்கின்றார்கள். கிழக்கை முழுமையாகத் தம்வசப்படுத்தத் தாமதமாகிவிடுமோ என்று அவர்கள் சிந்திக்கின்றார்கள். ஆனால், இன விருத்தியைப் பார்க்கும் போது முஸ்லிம் சகோதரர்களே கிழக்கைக் கைப்பற்றப் போகின்றார்கள். அவர்கள் இன விருத்தி கிட்டத்தட்ட 5 சதவீதம் என்றால் சிங்களவருடையது 2 சதவீதமும் தமிழர்களுடைய இனவிருத்தி வீதம் ஒரு சதவீதமும் ஆகும்.

எனவேதான் முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்து இணைந்த வடக்கு – கிழக்கில் தமிழ் வாழ வழி வகுக்க வேண்டும் என்கின்றேன்.

வடக்கு – கிழக்கை இணைக்குமாறு எமது முன்னைய தமிழ்த் தலைவர்கள் கோரினர். அப்போது இருந்த நிலைமை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. அப்போது வடக்கு கிழக்கு இணைப்பு, தமிழ் மக்களை கிழக்கு மாகாணம் பாரம்பரியமாகப், பெரும்பான்மையாகக் கொண்டிருந்தபடியால் கோரப்பட்டது. இப்பொழுது தமிழ் மொழியையும் தமிழ்ப் பாரம்பரியங்களையும் பாதுகாக்கவேண்டிய ஒரு கடப்பாட்டின் நிமித்தம் வடக்கு – கிழக்கு இணைப்புக் கோரப்பட வேண்டியுள்ளது. தமிழர் தலைவரின் திருமலை, தமிழர் பெரும்பான்மையாக வாழும் இடம் என்று சொல்லக் கூடிய நிலையில் நாம் இப்பொழுது இல்லை.

### சுயநிர்ணயம்

அடுத்து சுய நிர்ணயம். இங்குதான் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றமையின் விளைவுகள் தெரியவருகின்றன. சுதந்திரமாக வாழ்ந்த வட மாகாணத் தமிழ் மக்களும் தமிழ்ப் பேசும் குறுநில வன்னியனார்களால் ஆளப்பட்ட கிழக்கு மாகாணமும் ஆங்கிலேயர்களால் நிர்வாகம் நிமித்தம் 1833 ஆம் ஆண்டில் சிங்களப் பிரதேசங்களுடன் சேர்க்கப்பட்டன. ஆனால், வெள்ளையர்கள் வெளியேறிய போது தமிழ்ப் பேசும் வடக்குக் கிழக்கைத் தமிழ் மக்களிடம் கையளிக்க வேண்டும் என்று சிந்திக்கவில்லை. எமது அப்போதைய தமிழ்த் தலைவர்களும் இலங்கை பூராகவும் தமிழர்கள் பரவலாக வாழ்ந்தமையையே கவனத்திற்கு எடுத்திருந்தார்கள். ஒற்றையாட்சியின் கீழ் சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களைச் சகோதரர்கள் போல் பார்த்துக் கொள்வார்கள் என்று நினைத்து அரசியல் யாப்பின் 29 ஆம் சரத்தை மட்டும் பாதுகாப்பாகத் தந்துவிட்டு அரசியல், நிர்வாக அதிகாரங்களைச் சிங்களத் தலைவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். ஆங்கிலேயர்கள் இங்கிலாந்துக்குச் சென்றடைந்தார்களோ இல்லையோ சிங்களத் தலைவர்கள் அதற்கு முன்னரே மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தார்கள். அதன் பின் தமிழ் மக்களுக்கு எதிரான பல நடவடிக்கைகளை அவர்கள் எடுத்தார்கள்.

அப்போதுதான் தேசியத்தின் அவசியம் எமக்குப் புலப்பட்டது. தமிழர் வாழ்ந்த, வாழ்ந்துவரும், பக்கம் பக்கமாக அவர்கள் வாழும் இடங்கள் யாவும் அவர்களின் தேசியத்தின் நிமித்தம் சுய நிர்ணய உரிமை கொண்ட இடங்கள் என்று சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாதம் அப்போது முன்வைக்கப் பட்டது. உள்ளக சுய நிர்ணயம், சில அடிப்படைகளின் நிமித்தம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒரு சட்டக் கருத்தாகும். பாரம்பரிய பூமி, பொது மொழி, இனம், மதம் போன்றவை, பொதுப் பண்பாட்டுத் தகைமைகள் போன்றவை உள்ளக சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தின.

எனவே, ஆங்கிலேயர் காலத்தில் நாடெங்கும் பரவி விரவியிருந்த தமிழர்கள், தமக்கென இருக்கும் ஒரேயுரித்து சுய நிர்ணய உரித்தே என்று கண்டு அதனை வலியுறுத்தினர். அதனைத் தொடர்ந்து இன்றும் வலியுறுத்துவதன் அவசியம் உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

பக்கம் 04 >>>

# தமிழ் மக்களின் பிரச்சினையில் அக்கறையற்ற அரசியல்வாதிகள்

## சாடுகிறார் அமைச்சர் தயாசிறி

கொழும்பு, நவ.20

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு, அரசியல்வாதிகளிடம் உள்ளபோதிலும் அதனை அரசியல்வாதிகள் தீர்க்கின் றனரா என அமைச்சர் தயாசிறி ஜயசேகர கேள்வியெழுப்பினார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2009ஆம் ஆண்டு போர் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் தமது கடமையை நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்த இராணுவத்தினர், அரசியல்வாதிகளின் பொறுப்புக்களை நிறைவேற்றுமாறு கோரினர்.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் பொறுப்பு அரசியல்வாதிகளிடம் உள்ளது.

எனினும் அதனை அரசியல்வாதிகள் செய்கின்றனரா? என்பதே தற்போதைய கேள்வி. அவ்வா றான எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படுவதில்லை. அதற்குப் பதிலாக அந்தப் பிரச்சினையை மேலும் வலுவடைய செய்யும் வகையிலான வேலைத் திட்டங்களையே மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய நிலையில் ஜீவனோபாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில்



இத்தகைய பிரசாரங்கள் மக்களை அழிவை நோக்கி இட்டுச் செல்லும் வகையில் அமைந்துள்ளன. இந்தப் பிரச்சினை குறித்து அனைவரும் புரிந்துணர்வுடன் செயலாற்றாத பட்சத்தில் இன்னு மொரு தலைமுறைக்கு இந்தத் தேசியப் பிரச்சினை கடத்தப்படுகின்ற அதே வேளை, இந்தத் தேசிய பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்கப்போவதில்லை - என்றார்.

# வடக்கு அமைச்சரின் எதிர்ப்புக்கு தெற்குத் தீவிரவாதிகளே காரணம்

## கூறுகின்றார் அமைச்சர் மனோ கணேசன்

கொழும்பு, நவ. 20

வடக்கில் ஒரு தமிழ்க் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்ததற்கு தென்னிலங்கைத் தீவிரவாதிகள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

கொழும்பு இந்து வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற நடமாடும் சேவையின்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் அரசியலில் உள்ள முற்போக்காளர்களைப் பலமடைய வைக்கச் சிங்கள அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் தவறிவிட்டன.

இப்போதும் கூடச் சம்பந்தனை வெறுங்கையுடன் ஒன்றும் தராமல் ஓட்டிவிடத் தானே நீங்கள் முயல்கிறீர்கள்? ஒரே நாடு என்ற அடையாளத்துக்குள் வந்துவிட்ட சம்பந்தனை பலவீனப்படுத்தினால், வடக்கில் தீவிரவாதம் பலமடைவதை எவராலும் தடுக்க முடியாது.

ஆகவே இன்று வடக்கில் ஒரு தமிழ்க் கல்வி அமைச்சர் தேசிய கொடியைத் தூக்க மறுத்ததற்கு தென்னிலங்கைத் தீவிரவாதிகள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

இந்தத் தேசிய கொடி உட்பட்ட அரசமைப்புக்கு விசுவாசமாக நடப்பேன் என்று உறுதிமொழி அளித்து விட்டுத்தான், அனைத்து நாடாளுமன்ற, மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

அதுதான் சட்டம். இப்படி தேர்தலில் வெற்றி பெற்று வந்துவிட்டு, அமைச்சர் பதவியையும் பெற்று விட்டு இப்போது கொடியைத் தூக்கமாட்டேன் என்பது முரண்பாடானதாகும்.

எனினும் இத்தகைய முரண்பாடான ஒரு நிலைமை வடக்கில் இன்று உருவானதற்கு தெற்கின் சிங்களத் தீவிரவாத அரசியல்வாதிகள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும். எல்லாவற்றையும் வடக்கின் மீது, தமிழர் மீது சாட்டிவிட்டு தப்பிக்கொள்ள முடியாது. - என்றார் அவர்.

# பெற்றோல் தட்டுப்பாடு இல்லை வதந்திகளை நம்ப வேண்டாம்!

## பெற்றோலிய வளத்துறை அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,நவ.20

பெற்றோல் தட்டுப்பாடு நிலவுவதாக பரவிவரும் வதந்தி காரணமாக நேற்று மாலை முதல் கொழும்பு உட்பட நாட்டின் பலபகுதிகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் வரிசையாக அலை மோதுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பெற்றோலிய வளத்துறை அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்கவிடம்



வினவியதற்கு -

தேவையான அளவு பெற்றோல் கையிருப்பில் உள்ளதாகவும், இன்று அல்லது நாளை மற்றுமொரு கப்பல் கொழும்பை வந்தடையும் எனவும் நாட்டில் மீண்டும் பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட மாட்டாது எனவும் அவர் கூறியுள்ளார்.

# சிங்கள செயலாற்றுகைத் தினம் இன்று வேம்படி பாடசாலையில்

இரண்டாம் தேசிய மொழி சிங்கள செய லாற்றுகை தினம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ந.தெய்வேந்திர ராஜா தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத்துறை பேராசிரியர் எஸ்.ஸ்ரீ சற்குணராசா, மதிப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண நிபுணத்துவ ஆலோசகர் வீ.இராசையா மற்றும் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகக் கணக்காளர் மஞ்சுளாதேவி றஞ்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என யாழ். வலயக் கல்வி அலுவலகர் தெரிவித்துள்ளார். (இ)

# 8 இந்திய மீனவர்கள் கைது

சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட எட்டு இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களது இரண்டுபடகுகளையும் இலங்கை கடற்படை தம் வசப்படுத்தியுள்ளது.

இலங்கை கச்சதீவு பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.15 மணியளவில் இந்திய மீனவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் நேற்று பின்னிரவு 10.50 மணியளவில் மேலும் நான்கு இந்திய தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட் டனர்.

கைதுசெய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்களையும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர். நேற்று இவர்களை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்துள்ளார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்திய மீனவர்கள் 10 பேர் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பருத்தித்துறை கடல் எல்லையில் வைத்து கைது செய்யப்பட்டு யாழ். மாவட்டக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தொடர்பிலான வழக்கும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## தேசியக் கொடி....

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தன் முடிவெடுத்த போது அவருடன் அதில் கலந்துகொள்ள நான் முன்வரவில்லை. எனவே தான் எனது எதிர்ப்பை அவ்வாறு நான் காட்டிவந்துள்ளேன்.

எனினும், இலங்கை மக்கள் அனைவரையும் மதிக்கும் விதத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி வருகின்றேன். தேசிய கீதம் இசைக்கும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்தி வருகின்றேன். இப்பொழுது தேசிய கீதம் தமிழிலேயே வடமாகாணத்தில் பாடப்படுகிறது.

ஆகவே சர்வேஸ்வரனின் ஆதங்கம் ஒரு விதத்தில் வெளி வந்துள்ளது. எனது ஆதங்கம் இன்னொரு விதத்தில் வந்து கொண்டிருக்கின்றது. அவரின் உணர்ச்சிகளை நான் புரிந்துள்ளேன்; மதிக்கின்றேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் புறக்கணிப்பது எமது மக்கள் யாவரையும் புறக்கணிப்பது போலாகும். எமது மனவேதனையை அவ்வாறான புறக்கணிப்பால் எடுத்துக் காட்டாமல் விட்டிருக்கலாம் என்பதே என் கருத்து. தேசியக் கொடி பௌத்தத்திற்கும் பேரினத்திற்கும் மிகக் கூடிய முக்கியத்துவம் அளித்து இந் நாட்டின் முதல் குடியான தமிழர்களுக்கும் முதல் மதமான சைவத்திற்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது உண்மையே. ஆனால், அந்தப் பிழையை தேசியக் கொடியையோ தேசிய கீதத்தையோ உதாசீனம் செய்து வெளிக் காட்டாது வேறு வழிகளில் காட்டியிருக்கலாம் என்பதே எனது கருத்து.

ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தேசியக் கொடியை எரிப்பதை ஒரு ஜனநாயக உரித்து என்றே பார்க்கின்றார்கள். அதைக் குற்றம் என்று கண்டு அவ்வாறு செய்வோரை அவர்கள் சிறைப்படுத்துவதில்லை.

எனவே தனது எதிர்ப்பை இவ்வாறு காட்டாமல் வேறு வழிகளில் எதிர்காலத்தில் காட்டுமாறு சர்வேஸ்வரனிடம் கோரிக்கை விடுவனே தவிர அவருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதே என் கருத்து. தமிழ் மக்களின் மன வேதனையை சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் தேசியக் கொடியை நிராகரித்த வடக்கு மாகாணத்திற்கு அதிகாரங்களை எப்படி வழங்குவது என்று கேட்டுள்ளார். தவறுகளைத் தம்வசம் வைத்துக் கொண்டு இவ்வாறான கேள்விகளை சிங்கள அரசியல்வாதிகள் கேட்கக் கூடாது. அவரின் தவறுகளை அவருக்கு உணர்த்த வேண்டிய கட்டாயம் எனக்குள்ளது.

முதலாவது, சிங்கள அரசியல்வாதிகளே எமக்கு அதிகாரங்கள் வழங்க உரித்துடையவர்கள் என்று அந் நாடாளுமன்ற உறுப்பினர் நினைப்பது தவறானது. இது வரை காலமும் அவ்வாறு நடந் துள்ளதானால் சிங்கள அரசியல் தலைவர்கள் ஆங்கிலேயரையும் தமிழ் பேசும் மக்களையும் ஏமாற்றிப் பெற்றுக் கொண்ட சலுகைகளை அவர்கள் அடாவடித்தனமாகப் பாவித்து வந்துள்ளமையே காரணம். பெரும்பான்மை இனத்தவர் என்பதால் மற்றையோரை வேறுபடுத்தி, தம் மக்களுக்குப் பக்கச் சார்பாக நடந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கவில்லை. சுவிஸ்லாந்தில் சிறுபான்மையினருக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்குகின்றார்கள். ஆனால் இங்கோ எம்மைப் புறக்கணிக்கின்றார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமது எதிர்ப்பை வன்முறையற்ற முறையில் எடுத்துக் காட்டிய தமிழ்த் தலைவர்களை பேரை (Beira Lake) ஏரிக்குள் தூக்கி எறிந்தமை அடாவடித்தனமே. போர்முடிந்தும் இராணுவத்தை வட, கிழக்கு மாகாணங்களில் இன்றும் நிலை பெறச் செய்துள்ளமை அடாவடித்தனமே. செய்வதையும் செய்துவிட்டு எம் மீது பிழையைப் போடப் பார்க்கின்றார் உறுப்பினர்.

இரண்டாவதாக, அவர் மனதில் இருத்த வேண்டியது எவரும் தமது எதிர்ப்பை அஹிம்சா முறையில் எடுத்துக் காட்டலாம் என்பதை. சிங்களப் பெரும்பான்மையினம் விட்ட தவறுகளே எம் எதிர்ப்பை நாம் காட்ட வைத்ததேயொழிய எதிர்ப்பைக் காட்டினால் அதிகாரங்கள் வழங்க மாட்டோம் என்று மிரட்டுவது அவர்களின் அடாவடித்தனத்தின் மற்றொரு வெளிப்பாடு.

மூன்றாவது, அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது சட்ட ரீதியாகவே அல்லாது அடாவடித்தனம் செய்பவரின் அந்தரங்க எண்ணங்களின் அடிப்படையில் அன்று.

நான்காவது, போர் முடிந்து எட்டு வருடங்களாகியும் இராணுவத்தினரை வட கிழக்கு மாகாணங்களில் நிலை கொள்ளச் செய்த பின்னரே உறுப்பினர் இவ்வாறு கூறுகின்றார். எப்படியும் தமிழ் மக்களை அடிமைப்படுத்தி வைக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டில் இருந்துகொண்டு தான் அவர் அதிகாரம் வழங்குவது எவ்வாறு என்று கேட்கின்றார்.

முதலில் தேசியக் கொடியை நிராகரித்தவரின் மனோ நிலையை அவர் புரிந்து கொள்ளட்டும். அவருக்கு அந்த மனோ நிலையை வருவித்தவர்கள் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் உறவின அரசியல்வாதிகளே என்பதை உணர்ந்து கொள்ளட்டும். இறுதியாக அவரோ அவரின் கூட்டமோ எமக்கு அதிகாரங்களை வழங்குவது என்பது அடாவடித்தனத்தின் உச்ச வெளிப்பாடு என்பதை அவர் புரிந்து கொள்ளட்டும். - என்று கூறியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

### மஹிந்தவின் 'ஸ்லிப்பர் செல்'களும் மைத்திரியின் அதிரடி எத்தனங்களும்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரிவுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட சமரச முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து விட்டன என்று கொழும்புத் தகவல்கள் கூறுகின்றன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நல்லாட்சி அரசின் அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் அனைத்து எம்.பிக்களும் மைத்திரி பக்கத்தில் உள்ள சுதந்திரக் கட்சியில் உள்ளனர்.

சு.கவின் அமைச்சர் பதவிகள் வழங்கப்படாத எம்.பிக்கள் அனைவரும் கூட்டு எதிரணி என்ற கட்டமைப்பில் மஹிந்த ராஜபக்ஷ அணியில் உள்ளனர்.

சு.கவின் எம்.பிக்கள் என்று நாடாளுமன்றத்தில் ஒரு தொகுதியினரைத் தனது கட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வைத்திருக்கின்றார் என்றால், அவர்கள் அனைவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கித்தான் அதனை அவர் செய்ய வேண்டியிருக்கின்றது. அப்படி அமைச்சுப் பதவி மூலம் தக்கவைத்திருக்கும் எம்.பிக்களும் மைத்திரி பக்கத்தில் எத்தனை நாள்கள் நீடிப்பார்கள் என்பது கேள்விக்குறியே.

இப்படி மைத்திரி பக்கத்தில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தரப்பில் - அமைச்சர் பதவியுடன் சத்தம் சந்தடியற்றிருக்கும் பல அமைச்சர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசிகள் என்றும் கூறப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷ தரப்பு 'ஸ்லிப்பர் செல்'கள் (Sleeper Cells) அவர்கள் என்றும், சத்தம் சந்தடியின்றி தூங்கு நிலையில் சு.கவில் இருக்கும் அவர்கள் தமது மேலிட உத்தரவு மஹிந்த தரப்பிடம் இருந்து கிடைக்கும் போது தமது கைவரிசையைக் காட்டுவார்கள் என்றும் விடயமறிந்த அரசியல் வட்டாரங்கள் கொழும்பில் கூறுகின்றன.

சுதந்திரக் கட்சி மீதான மைத்திரிபால சிறிசேனவின் பிடியை தனது இந்த 'ஸ்லிப்பர் செல்'களை உரிய சமயத்தில் உசுப்பி விடுவதன் மூலம் தகர்க்கலாம் என்ற திட்டத்துடன்தான் மஹிந்த ராஜபக்ஷ காய் நகர்த்துகின்றார் என்றும் -

அதை முற்கூட்டியே உணர்ந்து பதில் தற்காப்பு நடவடிக்கைகளுக்கான வியூகத்தை ஜனாதிபதி தரப்பு ஏற்கனவே வகுக்கத் தொடங்கிவிட்டது என்றும் -

விடயமறிந்த கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

தம்முடன் அரசியல் சமரசத்துக்கு இணங்கி வராத முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இனிமேலும் விட்டுப் பிடிப்பது தமது அரசியல் எதிர்காலத்துக்கு ஆபத்து எனக் கருதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்கு ஏற்றவகையில் நகர்வுகளை ஆரம்பித்துள்ளார்.

அதில் முக்கியமான ஒன்றுதான், ஊழல், மோசடிகள் தொடர்பான உயர்மட்ட விடயங்களைக் குறுகிய காலத்தில் விசாரித்து முடிப்பதற்கு விசேட மேல் நீதிமன்றங்களை நியமிப்பதாகும்.

ஊழல் எதிர்ப்பு விசாரணைக்கென மூன்று விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்படும். அவற்றுக்கென மட்டும் மூன்று நீதிபதிகள் நியமிக்கப்படுவர். இந்த நீதிமன்றங்களின் முடிவுகளுக்கு எதிரான மேன்முறையீடுகள் நேரடியாக உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும்.

அதேசமயம், புலன்விசாரணை முடிவுற்ற பின்னரும் பல ஊழல், மோசடி விடயங்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் அவை சட்ட மா அதிபர் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற 92 ஊழல், மோசடி விவரங்கள் குறித்து புலன் விசாரணை நடத்தி, உரிய கோவைகளை நிதிக் குற்ற விசாரணைப் பொலிஸார், சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளனர் என்றும், ஆனால் 13 விடயங்களுக்கு மட்டுமே வழக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஏனையவை கிடப்பில் போடப்பட்டுள்ளனவாம்.

ஆகவே, இந்த வழக்குகள், விடயங்களை மட்டும் துரிதப் படுத்திக் கையாள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இதற்கென விசேட பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் ஜனாதிபதி தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

அந்தப் பிரிவின் நடவடிக்கைகளையும் முன்னேற்ற அறிக்கைகளையும் மாதந்தோறும் பரிசீலித்துக் கையாள்வதற்கு சுதந்திரமான உயர்மட்டக் குழு ஒன்றையும் அமைக்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தக் குழு, சம்பந்தப்பட்ட ஒவ்வோர் ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக் குறித்தும் தனித்தனியாகக் கவனித்து, அது தொடர்பான விசாரணைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமின்றி முன்னெடுக்கப்படுகின்றமையை உறுதி செய்யும் விதத்தில் வழிவகைகளை மேற்கொள்வதற்கு அதிகாரம் கொண்டதாக இருக்கும் என்றும் கூறப்பட்டது.

மொத்தத்தில் -

அரசியல் ரீதியாகத் தம்முடன் இணங்கி வர மறுக்கும் மஹிந்த தரப்புக்கு எதிராக சட்டம் எனும் சாட்டையைக் கையில் எடுத்து வழிக்குக் கொண்டு வர அதிகாரத் தரப்புத் தயாராகி விட்டது என்பதே இந்தச் செய்தியில் வெளிப்படுத்தும் தகவலாகும்.

இந்த நெருக்குதலை மஹிந்த தரப்பு எப்படி எதிர்கொண்டு முகம் கொடுக்கப் போகின்றது? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# மீண்டுமொரு யுத்தத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தால் வடக்கில் யுத்தம் ஒன்று ஏற்பட்டுப் பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்காது எனக் குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இன்னும் இத்தகைய செயற்பாடுகளுக்கு வாய்ப்புக்களை உருவாக்குகின்ற தரப்பினர் உள்ளனர் எனவும் கூறினார்.

கம்பகாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு அரசியல்வாதிகளால் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்காது.

உயரிய பௌத்த தர்மத்தை பின்பற்றுகின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் 15 சதவீதமாக மாத்திரம் வாழும் சிறுபான்மை மக்களான தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது இருக்கின்றமை ஏன் என்பது புரியவில்லை. எனினும், பெரும்பான்மையான மக்கள் இத்தகைய ஒடுக்குமுறைகளை விரும்புவதில்லை - என்றார்.

### கேவலம்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

#### சமஷ்டி

அடுத்து சமஷ்டி முறை. தமிழர்களை வடக்குக் கிழக்கினுள் வரம்புபடுத்த வேண்டும்; கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் ஒக்ஸ்பொட் (Oxford) சென்று நாடு திரும்பி வந்த எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா 1926 இல் இந்த நாட்டுக்குச் சமஷ்டி முறையை வலியுறுத்தினார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் எமது தமிழர்களே.

நாடெங்கிலும் பரந்து வாழும் எம்மை ஏன் வடக்குக் கிழக்கிற்குள் தனிமைப்படுத்தப் பார்க்கின்றீர்கள் என்று கேட்டார்கள் எம் தலைவர்கள். இதனால்தான் ஜீ.ஜீ. பொன்னம்பலம் 50இற்கு 50 என்ற யுக்தியை வலியுறுத்தினார். சிங்களப் பிரதிநிதிகள் 50 சதவீதமாக நாடாளுமன்றத்தில் இடம் பெற்றால் மற்றெல்லா சிறுபான்மை இனங்களும் சேர்ந்து 50 சதவீதம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். - என்றார்.

தமிழ் பேசும் மக்கள் நாட்டில் சிறுபான்மையினர் என்றாலும் வடக்குக் கிழக்கில் அவர்கள் பெரும்பான்மையினர். ஐம்பதுக்கு ஐம்பதை ஆங்கிலேயர்கள் ஏற்கவில்லை. தமிழர்கள் இருந்த இடத்திலேயே வசித்துக்கொண்டு சிங்கள ஆதிக்கத்தை முறியடிக்கவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் வழி கூறினார். அது ஏற்றுக்கொள்ளப் படாத போது சமஷ்டிக் கோரிக்கை தந்தை செல்வாவால் முன்வைக்கப்பட்டது. அதனையே நாம் இப்பொழுதும் வலியுறுத்துகின்றோம்.

தமிழ்பேசும்மக்களைவடக்குக் கிழக்கினுள் வரம்புபடுத்த சமஷ்டி அடிகோலும் என்பது சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். வடக்குக்கிழக்குமக்களின்நோக்குகளையும் தேவைகளையும் அபிலாஷைகளையும் சமஷ்டி அலகு பூர்த்தி செய்யுமே ஒழிய, கொழும்பில் இருக்கும் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் யாவரும் வடக்குக் கிழக்குக்குப் போகவேண்டும் என்றோ வடக்குக் கிழக்கில் வசிக்கும் சிங்களம் பேசும் சகோதர சகோதரிகள் சிங்களப் பிரதேசங்களுக்குச் செல்லவேண்டும் என்றோ கட்டளைகள் இடப்பட மாட்டா.

சுயநிர்ணயம், சமஷ்டி ஆகியன ஒரு மக்கட் கூட்டம் தம்மைத் தாமே ஆளவழிவகுக்கும். சமஷ்டி ஒன்றே ஓரளவுக்கு பெரும்பான்மையினத்தின் பேரினவாதத்தை முறியடிக்கக் கூடியது.

ஒற்றையாட்சி எமக்குத் தரும் இன்னல்களைப் பார்த்தோமானால் எம்மை நாமே ஆள - எமது தேவைகளையும், நோக்குகளையும் நோக்கிமுன்னேற - அது இடமளிப்பதில்லை.

உதாரணத்துக்கு மிக அண்மையில் ஒன்று நடைபெற்றுள்ளது. கொழும்பில் உள்ள நிறுவனமோ திணைக்களமோ ஒன்று. பிரதமருடன் சேர்ந்து வடமாகாணத்தைச் சுற்றியுள்ள தீவகப் பகுதிகளின் முன்னேற்றத்துக்காகவும் பொருளாதார விருத்திக்குமாக ஒரு செயல்திட்டத்தை வகுத்துள்ளது. விரைவில் நடைமுறைப்படுத்தவும் துணிந்துள்ளது. எம்முடன் எதுவுமே அது பற்றிப் பேசவில்லை. இதை அறிந்ததும் எனது பிரதிநிதியூடாக இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இவ்வாறான நடவடிக்கைகளே எம்மை சிங்கள மக்கள் தலைவர்களிடமிருந்து அந்நியப்படுத்தியுள்ளது என்பதை எடுத்துக்காட்டினேன். எம்முடன் சேர்ந்தே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று தெரிவித்தேன்.

அவர்களுக்குக்கூறாதஒன்றை நான் இங்கு கூற விரும்புகின்றேன். மத்திக்குத் தேவை பணம். எமது தீவகங்களை எவ்வாறு பெரும் பணம் ஈட்டப் பாவிக்க முடியும் என்பதே அவர்கள் கரிசனை. உதாரணத்திற்கு குடி, கும்மாளம், சூது, பரத்தமை போன்றவற்றிற்கு இடங்கொடுக்க வேண்டும்; அவற்றில் பெரும் பணம் ஈட்டலாம் என்று மத்தி முடிவெடுத்தால் எம்மால் அதை மாற்ற முடியுமா? அவர்கள் கைவசம் இருக்கும் இடங்களை எவ்வாறு அவர்கள் நிர்வகிக்கின்றார்கள் என்பதை நாம் அறியக்கூட முடியாததை, தற்போது இராணுவத்தினர் கைவசம் இருக்கும் இடங்களை வைத்தே புரிந்து கொள்ளலாம். அவர்கள் என்ன செய்கின்றார்கள், ஏன் செய்கின்றார்கள், எப்படிச் செய்கின்றார்கள் என்ற எந்த விவரங்களும் எமக்குத் தெரியாதிருக்கின்றது.

ஆகவேதான் நாங்கள் தாயகம், சுய நிர்ணயம், வடக்குக் கிழக்கு இணைப்பு, சமஷ்டி போன்றவற்றை வலியுறுத்தி வருகின்றோம். மத்தி எமக்காகச் சிந்தித்துச் செயற்பட எத்தனித்தால் எமது தனித்துவம் பறிபோய்விடும். அத்துடன், எமது விழுமியங்கள் விலைபோய் விடுவன.

சமஷ் என்று கூறி ஒற்றையாட்சியை நிறுவுவதும் சுய நிர்ணயம் என்று கூறி மத்தியின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. வடக்கு - கிழக்கை வலிந்து அங்கு வாழ் மக்களிடம் இருந்து அந்நியப்படுத்துவதையும், வடக்கு - கிழக்கில் அரச குடியேற்றங்களைப் பெருமளவில் முடுக்கி விடுவதையும் கண்டு அதை எம்மால் பொறுத்துக் கொண்டு இருக்க முடியாது.

சிங்கள மக்கட் தலைவர்கள் பிழையான நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். இது சிங்கள நாடு, தமிழர்கள் வந்தேறு குடிகள் என்று கூறுகின்றார்கள். அண்மைத் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் அந்தக் கருத்தைப் பிழைபடுத்தியுள்ளன. இவற்றைச் சிங்கள மக்கட் தலைவர்களுக்கு எடுத்துக் கூற எமது தலைவர்கள் முன்வர வேண்டும்.

எவ்வாறு ஒரு நோயைக் குணமாக்க நோயாளியின் வரலாறு முக்கியமோ எமது இனப்பிரச்சினையைத் தீர்க்கவும் எமது சரித்திரம் அவசியம். எமது அரசியல் நோயை முழுமையாகச் சுகப்படுத்த முழு வரலாற்று விவரங்களும், DNA பரிசீலனைகளின் விவரங்களும் பெறப்பட வேண்டும். நாட்டின் சரித்திரத்தின் முழு விவரங்களும் வெளிவந்தால் சிங்கள மக்கட் தலைவர்களின் சிந்தனையில் மாற்றம் பிறக்கும் என்று நான் நம்புகின்றேன். எனது நம்பிக்கை வீண் போகாது. நான் தமிழ்த் தலைமைகளுக்கு எதிரானவன் அல்லன். ஆனால், எமது தமிழ் மக்களுக்கு உறவானவன். அதனாதான் உங்களுக்கு நான் முரண்பாடுள்ளவனாகப் புலப்படுகின்றேன்.

### நாளை

21.11.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : மூலம் பி.இ. 03.17 வரை
திதி : திருதியை மு.இ. 10.59 வரை

சுபநேரம் : 10.40 - 12.10 வரை
இராகுகாலம்: 03.10 - 04.40 வரை

# இராணுவத்தை கோட்டா அரசியல் மயப்படுத்தினார்

## குற்றஞ் சுமத்துகின்றார் பீல்ட் மார்ஷல் பொன்சேகா

கொழும்பு, நவ.20

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராக இருந்த போது, இலங்கை இராணுவத்தை அரசியல் மயப்படுத்தினார் என்று இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு - செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் -

கோட்டாபய ராஜபக்ஷ இராணுவத்துக்குள் அரசியல் செல்வாக்கைப் புகுத்த முயன்றமையால், இராணுவம் இரண்டாகப் பிளவுபடுத்தப்பட்டது. இதுவும், மஹிந்த ராஜபக்ஷ தனது அதிபர் பதவியை இழப்பதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்று.

இராணுவத்தில் பணியாற்றிய போது, கோட்டாபய ராஜபக்ஷ, ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய போன்றவர்கள் குற்றங்களில் ஈடுபட்டனர். இப்போது அவர்கள் இராணுவத்தின் பெயரைக் கெடுக்கின்ற போலி தேசப்பற்றாளர்களாக இருக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ அதிபராக இருந்த போது இராணுவத்தை மதிக்கவில்லை. என்னை சிறையில் அடைத்தார். இன்னும் 35 இராணுவ அதிகாரிகளை இராணுவத்தில் இருந்து துரத்தினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தவறான முடிவுகளால், இராணுவத்தின் நற்பெயர் கெட்டுப்போனது. இராணுவ அதிகாரிகள் நம்பிக்கையிழந்தனர்.

2015இல் அவர் இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சியைத் தக்கவைக்க முயன்றார். ஆனாலும், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் தைரியம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை.

இப்போது, ஓய்வுபெற்ற சில உயர் மட்ட இராணுவ அதிகாரிகள் அரசியலில் ஈடுபடுகின்றனர். அத்தகைய சில அதிகாரிகள், புதிய அரசமைப்புக்குக் கை தூக்குவோரை சுட்டுக்கொல்ல வேண்டும் என்று கூறுகின்றனர். இத்தகைய நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களில் 95 வீதமானோர் தேசப்பற்றாளர்கள். அவர்கள் தாய்நாட்டுக்காகத் தியாகங்களைச் செய்துள்ளனர்.

ஆனால், இராணுவத்தில் கிட்டத்தட்ட 5 வீதமான சந்தர்ப்பவாதிகள் இருந்தனர். அவர்கள் இப்போது பல்வேறு அரசியல் குழுக்களின் பின்னால் செல்கின்றனர்.

இராணுவத்துக்கு எதிராக இப்போது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இராணுவம் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று கூறுகின்றமை கோழைத்தனமான செயல்.

தவறு செய்தவர்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் நற்பெயருக்கு நல்லதல்ல. -என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# வடக்கு - கிழக்கில் மு.கா. தனித்துப் போட்டியிடும்

கொழும்பு, நவ 20



உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தனித்துப் போட்டியிடவுள்ளது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் செயலாளர் நிஷாம் காரியப்பர் இதனைத் தெரிவித்தார்.

ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

தற்போது, வேட்பாளர் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது எனவும், விரைவில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் இது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஜிந்தோட்டை சேதங்களை மதிப்பிடும் பணி ஆரம்பம்

கொழும்பு, நவ 20



ஜிந்தோட்டைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் சேதமடைந்த சொத்துக்களை மதிப்பிடும் பணி ஆரம்பிக்கப்பட் டுள்ளது என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

பிரதேசத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் மக்கள் அமைதியாகச் செயற்படுமாறும் காலி வாழ் மக்களிடம் அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

# 2 ஆம் கட்ட மழை வீழ்ச்சி அடுத்த வாரம் ஆரம்பம்



கொழும்பு, நவ 20

வடகீழ் பருவக் காலத்தின் இரண்டாவது கட்ட மழை வீழ்ச்சி அடுத்த வாரம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக, இரண்டு மாதங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பாதிக்கப்பட்டது.

இடைப்பருவ காலத்தில், காற்று மெதுவாக அல்லது மாறி வீச வேண்டும். காற்றின் வேகம் அதிகரித்தால், மழையைப் பாதிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, அடுத்த வாரம், 100 மி.மீ வரையான மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

# இந்தியா செல்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, நவ 20

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் புதன்கிழமை இந்தியாவுக்கு அதிகாரபூர்வப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு நாள்கள் பயணமாக அவர் புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது, இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களையும் அவர் நடத்தவுள்ளார்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம உள்ளிட்ட உயர்மட்டக் குழுவொன்றும் பிரதமருடன் புதுடில்லிக்குச் செல்லவுள்ளது.

# சூட்டுக் காயத்துடன் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ 20

பொரளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாலந்த வித்தியாலயத்துக்கு அருகில் நேற்றுக் காலை 9.10 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாளிகாவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.


ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருக்கும் போது இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியே இவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வடக்கு கல்வி அமைச்சரின் நடவடிக்கை; சட்டமா அதிபருடன் ஆளுநர் ஆராய்வார்

கொழும்பு, நவ 20

வடக்கு மாகாணக்கல்வி அமைச்சரின் நடவடிக்கை தொடர்பில் இன்று சட்டமா அதிபர் அலுவலகத்துக்குச் சென்று ஆலோசனை பெறவுள்ளார் என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.



வவுனியாவிலுள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்றநிகழ்வொன்றின்போது வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுத்தமை அரசமைப்புக்கு எதிரான நடவடிக்கை எனப் பல தரப்புக்களிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து வடமாகாண ஆளுநரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனபலரும் கேட்டு வருகின்றனர். இது குறித்து சட்டமா அதிபர் செயலகத்தில் ஆலோசனை பெற இன்று திங்கட்கிழமை அங்கு செல்லவுள்ளார்எனவடக்குமாகாண ஆளுநர் மேலும் கூறினார்.

# கல்முனையை நான்கு சபைகளாகப் பிரிப்பதற்கு நிபந்தனைகளுடன் கொள்கையளவில் இணக்கம்

## நாளைமறுதினம் சம்பந்தன் தலைமையில் அடுத்த சந்திப்பு





கல்முனை, நவ.20

கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் 'நான்கு உள்ளூராட்சி சபைகளை' உருவாக்கி இனங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மாகாண சபைகள். அமைச்சில் உயர்மட்ட கூட்டமொன்று இடம்பெற்றது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இவ் உயர்மட்டக் கூட்டத்தில் 'கல்முனை மாநகரசபை பிரதேசத்தின் பிரிப்பு' தொடர்பில் கல்முனை சாய்ந்தமருது விவகாரங்கள் பலவும் நன்கு அலசி ஆராயப்பட்டு இறுதியில் மூன்று முஸ்லிம் பெரும்பான்மை சபைகளையும் ஒரு தமிழ் பெரும்பான்மை சபையையும் கொண்டதான நான்கு உள்ளூராட்சி சபைகளை உருவாக்குவது எனவும் கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டது.

இவ் உயர்மட்டக் கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா அஸாத் சாலி ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளான எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், மாவை சேனாதிராசா, கோடீஸ்வரன் மற்றும் ஹென்றி மகேந்திரன் உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த இந்நான்கு சபைகளும் கடந்த 1987 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்பிருந்த சபைகளின் எல்லைகளுடன் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் இந்த எல்லைகள் எந்த அரசியல்வாதிகளாலும் உருவாக்கப்பட்டவை அல்ல அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்களாலேயே வகுக்கப்பட்டன என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் .பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால், அதற்கு நாம் சம்மதிக்கப்போவதில்லையென ஹென்றிமகேந்திரன் திட்டவட்டமாக மறுத்திருக்கிறார். 1987இற்கு முன்பிருந்த முறையில் பிரிப்பதற்கு தமிழ்மக்கள் ஒருபோதும் உடன்படமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார். முழுமையான தமிழ்மக்களைக் கொண்ட முழுமையான தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்துமுள்ளடங்கிய கல்முனை நகரசபையொன்றே எமக்குத்தரப்படவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

தே.கா.தலைவர்ஏ..எல்எம்.அதாஉல்லா இப்பிரிப்பு தொடர்பில் முன்னர் தான் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும், நான்காகப் பிரிப்பதுவே தனது விருப்பமும் என முழு ஆதரவையும் தெரிவித்து அங்கு பேசியிருக்கிறார்.

அத்தோடு முஸ்லிம், தமிழ்ப் பிரதேசங்களின் தற்போதைய புதிய எல்லைகள் தொடர்பான கோரிக்கைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டதோடு முஸ்லிம்கள் தரப்பில் ஐந்து பிரதிநிதிகளும் தமிழர்கள் தரப்பில் ஐந்து பிரதிநிதிகளும் கொண்ட குழுக்களூடாக தொடர்ந்தும் பேச்சுக்களை மேற்கொண்டு முடிவுகள் எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டது.

அடுத்த தமிழ் முஸ்லிம் தலைவர்களது உயர்மட்டச் சந்திப்பு எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நாளை மறுதினம் 22ஆம் திகதி புதன்கிழமை சந்திப்பது என்றும் தீர்மானமாகியது.

**ஐவர்கொண்டகுழு**

இதனிடையில் இருதரப்பிலுமிருந்து தெரிவாகும் ஐவர் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுவருகின்றன.

தமிழர்தரப்பிலிருந்து தெரிவான ஐவர் கொண்ட குழுவின் விபரம் வருமாறு:

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா எம்.பி., ஊடகப்பேச்சாளர் எம்.எ.சுமந்திரன் எம்.பி. மற்றும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன், கல்முனை மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவரான ஹென்றிமகேந்திரன் மற்றும் ஒரு பிரமுகரின் பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என அறியவருகின்றது. (இ

### 1987 இற்கு முன் இருந்த பிரிப்பு போன்று

# கல்முனையை மூன்றாகப் பிரிக்க நாமும் ஒருபோதும் உடன்படோம்

### ரெலோ உபதலைவர் ஹென்றி மகேந்திரன்



கல்முனை, நவ.20

சாய்ந்தமருதிற்கு தனியான பிரதேசசபையை வழங்குவதை நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் மிகுதிப்பரப்பை மூன்றாகப் பிரிக்கவேண்டுமானால் 1987இற்கு முன்பிருந்த பிரிப்புப்போன்று பிரிப்பதற்கு நாம் ஒருபோதும் உடன்படமாட்டோம்.

இவ்வாறு கல்முனை உள்ளூராட்சிசபை விவகாரம் தொடர்பாக உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் பைசர்முஸ்தபா அண்மையில் கூட்டிய கூட்டம் தொடர்பாக அதில் கலந்துகொண்ட ரெலோ கட்சியின் உபதலைவரும் கல்முனை மாநகரசபையின் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவருமானஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கல்முனை மாநகரசபை பிராந்தியத்தை நான்காகப் பிரித்தல் என்ற விடயத்தில் தமிழ் முஸ்லிம் தலைவர்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா முன்னிலையில் சந்திப்பொன்றை நடத்தியிருந்தோம். நானும் பங்குபற்றியிருந்தேன். நியாயமானகருத்துக்கள்பரிமாறப்பட்டன. கொள்கையளவில் இருதரப்பும் பல விடயங்களை ஏற்றுக்கொண்டமை ஆரோக்கியமானதொரு நிலைப்பாடாகும்.

இதேவேளை சாய்ந்தமருதை விடுத்து எஞ்சிய பகுதியில்மூவினமக்களும் அனைவரும் ஒன்றாகவே இருக்கவேண்டும் என்பது எமது கருத்து. சாய்ந்தமருது பிரிக்கப்படவேண்டும் என அந்த மக்கள் கேட்டுள்ளார்களே தவிர மீதியை பிரிக்குமாறு தமிழ் மக்களாகிய நாம் ஒருபோதும் கோரவில்லை.

ஆனால் பிரதியமைச்சர்ஹரீஸின்திட்டத்தில்மிகுதிப்பரப்பை 3ஆகப்பிரிக்க வேண்டும் என்றிருந்தால் 1987இற்கு முன்பிருந்த முறைப்படிபிரிக்கமுடியாது. அதனை நாம் ஆட்சேபிக்கின்றோம்.

அப்படி எஞ்சிய பரப்பை மூன்றாகப் பிரிப்பதாயின் தமிழ்ப்பிரதேசங்களை உள்ளடக்கி ஒரு நகரசபையைத் தரவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். மீதியை எத்தனை சபைகளாக வேண்டும் என்றாலும் பிரியுங்கள் என்றார். (இ

## மருதமுனை கடற்பரப்பில் அள்ளிய மீன்கள்!



மருதமுனை கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் பல லட்சம் ரூபா பெறுமதியான பெரும் தொகையான கீரி இன மீன்கள் பிடிக்கப்பட்டன. கடலில் அள்ளி வந்த அந்த மீன்கள் கரையில் குவிக்கப்பட்டிருந்த காட்சி. (இ)

## சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டம்



அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்று அஸ் – ஸிறாஜ் வித்தியாலயத்தில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் குமார தலைமையில் நடை பெற்றது.

இதன் போது கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கபில ஜெசேகர, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நுவன் விஜய சேகர, அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் விஜய சேகர,அக்கரைப்பற்று, பொத்துவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசிறி, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ரீ.அதிசயராஜ், மற்றும் மதத் தலைவர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர். (இ

# தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கத் தவறினால் அடுத்த தலைமுறை ஆயுதம் தூக்குவதற்கு நேரிடும்


## ஐங்கரநேசன் எச்சரிக்கை






இப்போது யுத்தம் இல்லை. ஆனால், இலங்கை அரசாங்கம் சத்தம் இல்லாமல் தமிழ்ச் சிறுபான்மை இனத்தைப் பெரும்பான்மைக்குள் கரைத்து, முழு இலங்கையையும் பௌத்த சிங்கள நாடாகக் கட்டமைக்கும் முயற்சியை இப்போதும் தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. அரசாங்கம் எமக்கான தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்கத் தவறினால் – எமது பிரதேசத்தை ஆட்சி செய்யும் அரசியல் அதிகாரத்தை எங்களிடம் தரத்தவறினால் – நாங்கள் இப்போது கைகட்டி நின்றாலும் அடுத்த தலைமுறை ஆயுதம் தூக்குகின்ற நிலை நேரிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை





இயக்கத்தின் மரநடுகை மாதவிழா சங்கிலியன் பூங்காவில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றியபோது –

நான் சந்தித்த ஓர் அம்மையார் தனது பேரக் குழந்தை துப்பாக்கிப் பொம்மையுடனேயே விளையாட விரும்புகின்றது எனவும் அவர் ஒரு முன்னாள் போராளி என்றும் குறிப்பிட்டார். அதற்குப் பதிலாக, எல்லாக் குழந்தைகளுக்குமே துப்பாக்கிகள் மீது விருப்பம் அதிகம் என்று நான் சொன்னேன். ஆனால், அவர் அதற்குப் பின்னர் சொன்னவை எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

தாங்கள் போராளி குடும்பம் என்றும், இதன் காரணமாகத் தாங்கள் பட்ட அவலம் இனிமேல் தங்கள் குடும்பத்தில் யாருக்கும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று போராட்டத்தின் வாடையே தெரியாமலேயே பேரப்பிள்ளையை வளர்த்து வருகிறார் எனவும், அவரின் முன்னால் போராட்டத்துடன் தொடர்புடைய எந்த விடயங்களையும் ஒரு போதும் பேசுவதில்லை என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேரப்பிள்ளை பேசும் பேச்சுகள் தங்களுக்குப் பயத்தை ஏற்படுத்துகின்றன எனவும், ஒரு தடவை நெடுந்தீவுக்கு போனபோது படகில் கடற்படையினரைப் பார்த்த பேரன், இவர்கள் ஏன் எங்களுடன் வருகிறார்கள், இவர்களைச் சுடுவதற்கு அல்லவா நாங்கள் நினைத்திருந்தோம் என்று கூறினான் எனவும் தெரிவித்தார்.

இப்படிப் பல சம்பவங்களைச் சொன்ன அவர் தனது பேரப்பிள்ளை தங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகி வீரச்சாவடைந்த ஒரு போராளியின் மறுபிறப்பாக இருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

நாங்கள் கிட்டு பூங்காவில் இந்த நிகழ்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம். மாவீரர்கள் நினைவு நிகழ்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. போரில் பயந்து உறைந்த இந்தத் தலைமுறை இதற்குமேல் நகரத் துணியாது என்று அரசாங்கம் கருதலாம். ஆனால், வருங்காலத் தலைமுறை அவ்வாறு இருக்காது. நான் குறிப்பிட்ட அம்மையார் சொன்ன மறுபிறப்பு நம்பிக்கை விவாதத்துக்கு உரியதாக இருக்கலாம். ஆனால், அரசாங்கம் எமக்கான சரியான அரசியல் தீர்வைத் தராமல் எங்களைத் தொடர்ந்தும்; அடக்கி ஆள நினைத்தால் அடுத்த தலைமுறைகள் ஆயுதம் தூக்குவது தவிர்க்க இயலாதது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

வடக்கின் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந் நிகழ்ச்சியில் விவசாய அமைச்சர் க. சிவநேசன், ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், ஊவாவெல்லச பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் இ. சர்வேஸ்வரா, 'இமை' நிறுவனத்தின் செயலாளர் மகேசன் கஜேந்திரன் ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

# அரசியல் நோக்கங்களுக்காக அரசமைப்பைக் குழப்பாதீர்!

## சிறிநேசன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, நவ 20

புதிய அரசமைப்பைக் குழப்பியடிக்கும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர். நாட்டில் ஏற்படுத்தப்படவுள்ள சமாதானத்தைக் குழப்பாமல் அனைத்து இன மக்களும் உரிமையுடன் வாழும் நிலைக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு உதவ வேண்டும். அரசியல் நோக்கத்திற்காக புதிய அரசமைப்பை எவரும் குழப்பிவிட வேண்டாம் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாமாங்கம் ரட்ணம் விளையாட்டுக் கழகம் தனது 23 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தியது.

இந்த விளையாட்டுப் போட்டியின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதுள்ள இனப் பிரச்சினையை யாரும் தங்களது சுயநல அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது.

இந்த நாட்டில் உள்ள மூவின மக்களும் சந்தோசமாகவும் சமத்துவமாகவும் வாழ்வதற்கு இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

எவரும் இரண்டாம் தரப் பிரஜைகளாக இருக்கக் கூடாது. ஓர் இனத்தைக் கண்டு இன்னுமோர் இனம் அச்சம் கொள்ளும் நிலையில்லாமல் அனைவரும் சகோதரர்கள் என்ற ரீதியிலும், இலங்கையர் என்ற ரீதியிலும் ஒற்றுமையாகச் செயற்படக்கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவேண்டும்.

இனமோதல்கள், இனப்பகைகள் இல்லாமல் அனைவரும் சமத்துவமாக முன்னைய காலத்தில் இருந்த ஐக்கியத்துடன் வாழும் நிலையை ஏற்படுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் விட்டுக்கொடுப்புகளைச் செய்து வருகின்றார்.

இந்த ஆண்டில் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதன் ஊடாகச் சகல மக்களும் அச்சமற்ற உரிமையுடன் வாழும் நிலை உருவாக்கப்படவேண்டும் என்பதோடு, அனைத்து மக்களும் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி உரிமைகளைப் பகிர்ந்து வாழும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

சுவிஸ் போன்ற நாடுகளில் பல இனங்கள், பல மதங்கள் இருக்கின்றபோதிலும் அனைத்து இன மக்களும் சந்தோசமாக ஜனநாயக உரிமையுடன் வாழ்ந்து வருகின்றனர். அதேபோன்றதொரு சூழல் இலங்கையிலும் உருவாக்கப்படவேண்டும். – என்றார்.

## சிங்கக் கொடி ஏற்ற மறுத்த விவகாரம்:

# அமைச்சர் சர்வேஸ்வரனிடம் விளக்கம் கோருகிறார் எஸ்.பி.

கொழும்பு, நவ.20

அரசியல் நிலைப்பாடு தொடர்பில் விளக்கமளிக்க வடமாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனுக்கு அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க –

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், உண்மையாக கல்வித் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றுக்கொண்டவரானால் அவரது நிலைப்பாடு தொடர்பில் நாட்டுக்கு விளக்கமளிக்க அவருக்கு நாம் அழைப்பு விடுக்கிறோம் என்று கூறினார்.

வவுனியாவில் இடம்பெற்ற பாடசாலை விழா ஒன்றில், கலந்து கொண்ட வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர்



சர்வேஸ்வரன் அங்கு தேசியக் கொடியை ஏற்றுவதற்கு மறுப்புத் தெரிவித்தமை தொடர்பாகக் கேட்டபோதே அமைச்சர் எஸ்.பி. இவ்வாறு கூறினார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில்

# விசேட திண்மக் கழிவு அகற்றும் பணி இன்று முதல் தொடர்ந்து 5 தினங்கள்


யாழ்ப்பாணம்,நவ.20

மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இன்று திங்கட்கிழமை முதல் தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரை 5 தினங்கள் விசேட திண்மக் கழிவு அகற்றும் செயற்றிட்டம் குறித்து யாழ். மா்நகர சபையின் ஆணையாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

இந்தச் செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு, குருநகர் ஐந்து மாடிக் குடியிருப்பு கடற்கரைப் பகுதியில் இடம்பெறும்.

இந்த விசேட திண்மக் கழிவு அகற்றும் வேலைத்திட்டத்தை யாழ். மாநகர சபை, மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் என்பன இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அதிகமாக நிரம்பிக் காணப்படும் திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள் இடம்பெறவுள்ள பகுதிகள் குறித்த கால அட்டவணை வருமாறு-



வேலைத்திட்டம் குறித்து ஆணையாளர் அறிவிப்பு

★இன்று திங்கட்கிழமை- குருநகர் 5 ஆம் மாடிக் குடியிருப்பில் இருந்து ஆரம்பித்து கடற்கரை வீதி வரை.

★நாளை செவ்வாய்க்கிழமை பாசையூர், அரியாலை.

★நாளை மறுதினம் புதன்கிழமை நல்லூர், வண்ணார்பண்ணை.

★எதிர்வரும் வியாழக்கிழமை- நாவாந்துறை.

★எதிர்வரும் வெள்ளிக்கிழமை- பசார் பகுதி. (இ)

## தினசரி ராசி பலன் 20.11.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் கார்த்திகைத் திங்கள் 5 ஆம் நாள் திங்கட்கிழமை துவிதீயைத் திதி இரவு 9.36 மணிவரை. பின்னர் திரிதீயை. நட்சத்திரம் கேட்டை பகல் 12.47 மணிவரை. பின்னர் மூலம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 7.34 மணிமுதல் 9.01 மணிவரை.*

**சுபநேரம்** - *காலை 12.14 மணிமுதல் 1.44 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *கார்த்திகை மாத வளர்பிறை துவிதீயை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *கேட்டை.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சஞ்சலமான நாள். பணவரவு குறைவடையும். குடும்பத்தில் நிம்மதி குறையும். வியாபாரத்தில் சரிவு உண்டாகும். அதிக அலைச்சல் உடல் அசதியைத் தரும். நண்பர்கள் பாராமுகத்துடன் நடந்து கொள்வார்கள்

**ரிஷபம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். தேவையற்ற வீண் செலவுகள் உண்டாகும். தேக சுகம் ஓரளவு சீராக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மிதுனம்:** அனுகூலமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம் உண்டாகும். எடுத்த காரியம் வெற்றி அடையும். வியாபாரம் அமக்களமாக நடக்கும்.

**கடகம்:** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேம்படும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். உறவினர்கள் துணையாக இருப்பார்கள்.

**சிம்மம்:** சலனம் மிகுந்த நாள். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். நினைத்தவை கைகூடாமல் போகும். உத்தியோகத்தில் அலைச்சல் அதிகரிக்கும்.

**கன்னி:** மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் நிலையில் ரோகங்கள் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் தடைப்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்:** ஆக்கபூர்வமான நாள். எண்ணியவை நிறைவேறும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். சகோதர உறவு வலுவடையும்.

**விருச்சிகம்:** இன்பமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய பொருள்கள் வாங்கி மகிழ்வார்கள். வெளிநாட்டுப் பயணங்கள் தடைப்படும்.

**தனுசு:** துயரமான நாள். பணம் பற்றாக்குறையாக காணப்படும். உடலில் உபாதைகள் உண்டாகும். குடும்பத்தில் அமைதி குன்றும். மாணவர்கள் தேர்வில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

**மகரம்:** சுபீட்சமான நாள். பணம் எல்லா வழியிலும் வந்து சேரும். குடும்பத்தில் எல்லையில்லாத மகிழ்ச்சி காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு பணி புரியும் இடத்தில் நல்ல பெயர் உண்டாகும்.

**கும்பம்:** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். தந்தை மகனுக்கு இடையில் சில சச்சரவுகள் தோன்றும். அலுவலக பணிகளில் அவசர வேலைகளை கூடுதலாக பார்க்க வேண்டி வரும்.

**மீனம்:** உயர்வான நாள். பொருளாதாரம் மேன்மையடையும். தொழிலில் இருந்து வந்த சிரமம் குறையும். எடுத்த காரியங்கள் கைகூடும். உத்தியோகத்தில் திறமைக்கு தகுந்த மதிப்பு ஏற்படும்.

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில்தோன்றியோர்இன்றுசுபகருமங்கள் ஆரம்பிக்கின்றமையைத் தவிர்க்கவும்.**

# காலி வன்முறை தொடர்பில் தவறான பிரசாரம் வேண்டாம்

## பொலிஸ் தலைமையகம் கோரிக்கை

கொழும்பு, நவ 20

காலி, ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் தவறான பிரசாரங்களை வெளியிடுவதைத் தவிர்த்து கொள்ளுமாறு பொலிஸ் தலைமையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமூக ஊடகமான பேஸ்புக்கில் போலியான தரவுகளை வழங்குதல், தவறான பிரசாரங்களைப் பதிவிடுதல் என்பன தொடர்பில் பொலிஸ் தலைமையகத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் சமூக ஊடகங்களில் இவ்வாறு தவறான பிரசாரங்களை முன்னெடுப்போர் அல்லது போலித் தகவல்களை பேஸ்புக்கில் பதிவிட்டுக் கலவரங்களைத் தூண்டுவோரைக் கைது செய்வதற்காகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது எனவும் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

## யாழ். வைத்தீஸ்வரா பழைய மாணவர் மன்ற செயற்குழு தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத் தின் பொதுச்சபைக்கூட்டம் அண்மையில் அதிபர் தலைமையில் இடம்பெற்ற போது பின்வருவோர் புதிய வருடத்துக்கான (2018) செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்- அதிபர் திருமதி வாசுகி தவபாலன், பொருளாளர்- ஆர்.ரவீந்திரன், உப தலைவர்- செ.சுப்பிரமணியம், வி.ஸ்ரீ சக்திவேல், எம்.எல்.லாபிர், உப செயலாளர்- செ.உதயச்சந்திரன், உப பொருளாளர்-சிவகுமரன், உறுப்பினர்களாக- எஸ். சிவகுமாரன் சி.ஜனக்குமார், ஹரிச்சந்திரா, ஆர்.மதிதரன், கலாநிதி நா. தனேந்திரன், வி.தயாபரன், எம்.மகனாஸ், எஸ். சிவதாசன், கே.ஸ்ரீபதி, கலாநிதி எம்.புவனேந்திரன், திருமதி இராஜேஸ்வரி கணக்காய்வாளராக எஸ்.ரகுநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-19)

## மாற்று வலுவுடையோர் தின விழா நிகழ்வு நாளை 'ரிசிரி'யில்

யாழ்ப்பாணம்,நவ.20

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் சர்வதேச மாற்று வலுவுடையோர் தினவிழா நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு- யாழ். நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிறுவனம் (ரிசிரி) சொர்ணாம்பிகை மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் இனிய விருந்தினர்களாக பரந்தன் மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு.எஸ்.சசிகுமார், ஓய்வுநிலை விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் (வவுனியா) ஏ.சுப்பிரமணியர், சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவுநர் கணேஷ்வரன் வேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்வர்.

தேசிய மட்ட சாதனையாளர் கௌரவிப்பு, பரிசில் வழங்கல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ)

## மின் தடை அறிவித்தல்

யாழ்ப்பாணம், நவ.20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**கிளிநொச்சி பிரதேசத்தில்**- ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியாமலை, பட்டிக்குடியிருப்பு, மருதோடை, கற்குளம், கோவில்புளியங்குளம், நெடுங்கேணி மொபிற்றல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்**- பம்பைமடு கிராமம், கற்பகபுரம் கிராமம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, அழகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந்துப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரியகுளம் SLBC ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.20

அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.05 மணிக்கு அதிபர் எம்.சி.சுதாகரன் தலைமையில் டானியல் பூவர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் மா.ஆனந்தகுமார், சிறப்பு விருந்தினராக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி பிறேமாவதி அம்பிகைபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

உலக கழிப்பறை தினம் நேற்று (நவ.19) ஆகும். அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

# 19 நவம்பர் உலக கழிப்பறை நாள்



## சுகாதார கழிப்பறை வசதி இல்லாத

# உலகின் 260 கோடி மக்களில் 180 கோடி பேர் தெற்காசியர்!

ஆண்டுதோறும் பல்வேறு நாள்கள் உலக தினங்களாக கடைப்பிடிக்கப்படுகின்றன. ஆனால், கழிப்பறைக்காகவும் ஓர் உலக தினம் கடைபிடிக்கப்படுகிறது என்பது வியப்பாக இருக்கும். கழிப்பறை என்பது அவ்வளவு முக்கியமானதா? என்று நினைக்கலாம். ஆம், கழிப்பறை பிரச்சினை சர்வதேச அளவில் ஒரு பெரிய சவாலாக உள்ளது. உலகம் முழுவதும் சுமார் 260 கோடி மக்கள் இந்த நெருக்கடியை நாள்தோறும் சந்தித்து வருகிறார்கள் என ஐ.நாவின் அறிக்கை தெரிவிக்கிறது.

கழிப்பறை பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி தோற்றுவிக்கப்பட்டதுதான் உலக கழிப்பறை கழகம் என்ற சர்வதேச அமைப்பு. சிங்கப்பூரை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் இந்த அமைப்பில் பல்வேறு நாடுகளின் கழிப்பறை மேம்பாட்டு அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்ட நவம்பர் 19ஆம் திகதி அன்று அனைத்து நாடுகளிலும் 'உலக கழிப்பறை தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது. கழிப்பறை சுகாதாரத்தின் முக்கியத்துவத்தையும் அது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதுதான் இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

கழிப்பறை வசதி என்பது ஆரோக்கியத்தின் அடிப்படை. இயற்கையின் அழைப்பிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது. விழித்ததிலிருந்து படுக்கைக்குச் செல்லும் வரை, ஏன்? தூக்கத்திற்கு இடையிலும் கூட இயற்கை உபாதைகளுக்கு பதில் சொல்லியே ஆக வேண்டும்.

### வெளிப்படையாகக் கூற கூச்சப்படும் சிலர்

வீடு, அலுவலகம், பயணம் என்று எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் இயற்கையின் அழைப்பு வரலாம். இன்று முடியாது, நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திப் போட முடியாது. ஆனால் இதைப் பற்றிப் பேசுவதற்குக் கூட யோசிக்கிறோம். அது ஏதோ கூடாத செயல் போல எண்ணுகிறோம். இயற்கை உபாதைகள் ஏற்பட்டால், வெளிப்படையாகச் சொல்ல பலர் கூச்சப்படுகிறார்கள்.

வீதிக்கு வீதி வகை வகையான உணவகங்கள், கடைகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் கழிப்பறை மட்டும் நாம் தேடும் இடத்தில் அல்லது தேவைப்படும் இடத்தில் இருப்பதில்லை. வீட்டைவிட்டு புறப்படுவதற்கு முன்பே எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு புறப்பட வேண்டிய கட்டாய நிலை உள்ளது. பல நேரங்களில் அவசரத்துக்கு இடம் கிடைக்காமல் உரிய இடம் தேடி அலைந்து அல்லற்படுகின்றனர். அன்றாடம் கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை இப்படித்தான் கழிகிறது.

**உலக கழிப்பறை தினம் என்றால் ஆச்சரியமா? நவ.19 உலக கழிப்பறை தினம் தான்!**

### இந்தியாவின் நிலையோ மிகவும் மோசம்

உலக அளவில் சுகாதாரமான கழிப்பறை வசதி இல்லாத 260 கோடி மக்களில் 180 கோடி மக்கள் தெற்காசிய நாடுகளில் வசிக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை 28 சதவிகித மக்கள் மட்டுமே நல்ல கழிப்பறை வசதியோடு வாழ்கிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் உள்ள காங்கோ, உகண்டா, தான்சானியா போன்ற நாடுகள் இந்தியாவைவிட மேம்பட்ட சுகாதார வசதியோடு இருக்கின்றன என்று ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

போதிய கழிப்பறை வசதி இல்லாத காரணத்தால் ஏரிகள், குளங்கள், வீதி ஓரங்கள், வயல்வெளிகள், கண்மாய்கள் போன்ற இடங்களில் காலைக்கடன்களை முடித்துக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது. அதிலும் குறிப்பாக பெண்களின் நிலை மிகவும் வேதனைக்குரியது. இருள் பிரியாத அதிகாலை நேரத்தையும், இருள் கவியும் மாலை நேரத்தையும் மட்டுமே அவர்கள் பயன்படுத்த வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் அவர்கள் தொற்று நோய், பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

சரியான கழிப்பறை வசதியில்லாத காரணத்தால் பெண்களின் கல்வி, ஆரோக்கியம், கௌரவம் போன்றவையும் பாதிப்புக்குள்ளாகின்றன. குறிப்பாக பள்ளிகளில் பயிலும் மாணவிகள் தங்கள் படிப்பைத் தொடராமல் இடைநிறுத்தம் செய்வதற்கு தாங்கள் பயிலும் பள்ளியில் போதிய கழிப்பறை வசதிகள் இல்லாததும் ஒரு முக்கிய காரணம் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

உடல் ரீதியான வேறுபாட்டால் பெண்கள் கழிப்பறைகளைப் பயன்படுத்தும் நேரம் ஆண்களை விட அதிகம். ஆகவேதான் பெண்களுக்கும் ஆண்களுக்குமான கழிப்பிட வசதிகள் 2:1 என்ற விகிதத்தில் இருப்பது நல்லது என்று உலக அளவிலான IPC (International Plumbing Code) அறிவுறுத்தியுள்ளது. பெரும்பாலான மேலை நாடுகள் ஆண்களுக்கு ஒரு கழிப்பிடம் கட்டினால் அந்த இடத்தில் பெண்களுக்கு இரண்டு கழிப்பிடங்கள் கட்ட வேண்டும் எனச் சட்டம் இயற்றி உள்ளன.

உலக சுகாதார நிறுவனமும், யுனிசெப் நிறுவனமும் இணைந்து உலக அளவில் சுகாதாரம் மற்றும் குடிநீர் வசதி எவ்வாறு உள்ளன என்பது குறித்து ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. கழிப்பறை வசதியை நான்கு விதமாக இந்த அறிக்கை பிரித்துக் காட்டுகிறது. அதாவது வெட்ட வெளியைக் கழிப்பறையாகப் பயன்படுத்துகிறவர்கள், சுகாதாரக் குறைவான கழிப்பிடங்களைப் பயன்படுத்துகிறவர்கள், பொதுக்கழிப்பிட வசதிகளைப் பயன்படுத்துகிறவர்கள், தண்ணீர் வசதி நன்றாக உள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்துகிறவர்கள் என்று அந்த அறிக்கை வகைப்படுத்தி இருக்கிறது.

### திறந்தவெளியை கழிப்பிடமாக பயன்படுத்துவோரில் 58 வீதமானோர் இந்தியர்

உலகில் திறந்தவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவோரில் 58 சதவீதம் பேர் இந்தியர்கள் என்றும், சீனா, இந்தோனேஷியா போன்ற நாடுகளில் வெறும் 5 சதவீதம் மக்கள்தான் திறந்தவெளிக் கழிப்பிடங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. வேறு வகையாக சொல்வதானால் உலகில் திறந்தவெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தும் மக்கள் தொகையில் பாதிக்கும் மேலானவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள்.

### நவீன கழிப்பறைகள்

ஆண், பெண் படம் போட்டுப் பிரித்துக் காட்டும் பொதுக் கழிப்பறையை ஒரு காலத்தில் ரயில் நிலையங்களில் மட்டும்தான் பார்க்க முடியும். இன்று ஊருக்குள்ளும், பஸ் நிலையங்களிலும் கட்டணக் கழிப்பறைகளைப் பார்க்க முடிகிறது. இவைகள் முறையாக பராமரிக்கப்படாததால் பல இடங்களில் பயனற்று பாழடைந்து கிடக்கின்றன. சில இடங்களில் பயன்படுத்தும் அளவுக்கு தரமில்லாமல் இருக்கின்றன.

பிந்தேஸ்வர் பாடக் என்பவர் 'சுலப் இண்டர்நேஷனல்' என்ற தன்னார்வ சேவை நிறுவனத்தைத் தொடங்கி அதன் மூலம் முக்கிய நகரங்களில் சமுதாயக் கழிப்பறைகளை அமைத்துள்ளார். நாள்தோறும் சுமார் 1 கோடிக்கும் மேலான மக்கள் பயன்படுத்தும் வகையில் 5000இற்கும் மேற்பட்ட கழிப்பறைகளை இவரது அமைப்பு நிர்வகித்து வருகிறது.

### நடமாடும் கழிப்பறைகள்

சக்கரங்கள் பொருத்திய நடமாடும் அல்லது நகரும் நவீன கழிப்பறைகள் மேலை நாடுகளில் புழக்கத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. எங்கெல்லாம் தற்காலிகமாக இந்த வசதி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் இத்தகைய கழிப்பறைகளைப் பயன்படுத்தலாம். பத்து ஆண்டு உத்தரவாதத்துடன் பல நிறுவனங்கள் இத்தகைய கழிப்பறைகளை விற்பனை செய்கின்றன.

திறந்தவெளியில் மலம் கழிப்பதில் சௌகரியச் குறைச்சல் இருந்தாலும், அதில் சுதந்திரமிருப்பதாக பலர் கருதுகின்றனர். 'சென்றோம், வந்தோம்' என்றில்லாமல் கழிவறையைக் கட்டிக் கொண்டு அதைக் கழுவிக் கொண்டு என்று சலித்துக் கொள்பவர்களும் உண்டு. ஆனால் இந்த எண்ணம் அண்மைக் காலமாக மாறி வருகிறது. வீட்டோடு இணைந்த கழிப்பறைகளைக் கட்டிக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். காரணம், திறந்த வெளியில் மலம் கழிப்பது தவறு என்று உணர்ந்ததால் மட்டும் அல்ல. 'அவசரத்துக்கு' ஒதுங்கக் கிடைத்த மறைவிடங்கள் இன்று கிராமங்களில் கூட காணாமற் போய்விட்டதும் ஒரு காரணம். இயற்கை உபாதைகளை வெளியேற்றவிரும்பும் அந்த கணத்தில் கழிப்பறை வசதி கிடைப்பது என்பது ஒரு வரப்பிரசாதம். அதனை ஒவ்வொருவரும் நிச்சயம் உணர்ந்திருப்பார்கள்.

சுகாதாரம் என்பது மக்கள் வாழ்வின் அடிப்படை உரிமை என்று உலக அளவில் குரல்கள் வலுத்து வருகின்றன. 2025ஆம் ஆண்டுக்குள் கழிப்பறை பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ.நா. தீர்மானித்துள்ளது. அனைவருக்கும் கழிப்பறை வசதி' என்ற இலக்கை அடைவதற்கான செயற்பாடுகளுக்கு உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. ★



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




> **பொதுப் பாதுகாப்பு கொள்கை ஒன்றுக்கான சுற்று வரை ஆவணம் ஒன்றில் 28 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் 23 இன் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் புருசெல்ஸில் கையெழுத்திட்டனர்.**



ஐரோப்பிய ஒன்றியம் வருங்காலத்தில் அமெரிக்காவில் இருந்து சுயாதீனமான மற்றும் அவசியமானால் அந்நாட்டிற்கு எதிராகவும் கூட, போரை நடத்துகின்ற திறனை அபிவிருத்தி செய்வதை நோக்கிய ஒரு முக்கிய அடியெடுப்பை எடுத்து வைத்திருக்கிறது.

பொதுப் பாதுகாப்புக் கொள்கை ஒன்றுக்கான சுற்றுவரை ஆவணம் ஒன்றில் 28 ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகளில் 23 இன் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் புருசெல்ஸில் கையெழுத்திட்டனர். 2019 இல் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலக இருக்கும் பிரிட்டனுடன் சேர்ந்து, டென்மார்க், அயர்லாந்து, மால்டா மற்றும் போர்ச்சுக்கல் ஆகிய இன்னும் நான்கு சிறிய நாடுகள் மட்டுமே இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. ஆயினும், அவையும் கூட எந்தச் சமயத்திலும் கையெழுத்திட முடியும்.

> **"நிரந்தரக் கட்டமைப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை" (PESCO) மூலம், ஐரோப்பிய ஒன்றிய அரசுகள், ஆயுதங்களின் அபிவிருத்தி மற்றும் கொள்முதலில் நெருக்கமான ஒத்துழைப்புக்கும், கூட்டு இராணுவத் தலையீடுகளுக்கு துருப்புகளையும் சாதனங்களையும் கொண்டிருக்கவும் உறுதிபூண்டிருக்கின்றன.**

PESCO ஐரோப்பிய ஒன்றியத்தின் பிராந்தியம் மற்றும் குடிமக்கள் பாதுகாப்பில் முதலீட்டுக்கான ஒரு இலட்சிய நோக்குடனான, கட்டுப்படுத்துகின்ற மற்றும் உள்ளடக்கலான ஐரோப்பிய சட்ட சுற்றுவரையாகும் என்று அந்த ஆவணம் தெரிவிக்கிறது. ஐரோப்பாவை செயல்படவும், விரைந்து செயல்படவும் திறனுடையதாக்குவதே முக்கிய பிரச்சினையாகும் என்று ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சகத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.






இந்த உடன்படிக்கை ஐரோப்பிய இராணுவவாதத்தின் ஒரு தீவிரப் படலைக் குறித்து நிற்கிறது. இராணுவச் செலவினத்தில் சீரான அதிகரிப்பு இருக்க வேண்டும் என்பதுதான் அத்தனை தரப்பும் உறுதிகொடுப்பதற்கான 20 நிபந்தனைகளில் முதலாவதாய் இருக்கிறது. இதில் குறைந்தது 20 சதவீதமேனும் புதிய ஆயுதங்களைக் கொள்முதல் செய்வதை நோக்கி செலுத்தப்பட்டாக வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் தனது பங்காக கூட்டு ஆயுதத் திட்டங்களுக்காக வருடந்தோறும் 500 மில்லியன் யூரோக்கள் பங்களிப்பு செய்யவும் 2021 இற்குப் பின்னர் ஒரு பில்லியன் யூரோக்கள் பங்களிப்பு செய்யவும் எண்ணம் கொண்டிருக்கிறது.

இந்த ஒத்துழைப்பின் வடிவம் தொடர்பான விவரங்கள் இனிவரும் வாரங்களில் பேசப்படும். கூட்டுத் திட்டங்களுக்கு இப்போதைக்கு 47 ஆலோசனைமொழிவுகள் இருக்கின்றன. ஒரு கூட்டு நெருக்கடி பதிலிறுப்புப் படை, பன்னாட்டு சண்டை பிரிவுகளின் உருவாக்கம், ஐரோப்பாவின் பயிற்சி நடவடிக்கைகளுக்கான ஒரு கூட்டு செயல்சிறப்பு மையம், உலகெங்கிலும் பல்வேறு பிராந்தியங்களிலும் இராணுவத் தலையீடுகள் செய்வதற்கான முன்னெச்சரிக்கை திட்டங்கள், அதிகாரத்துவ இடைஞ்சல்கள் இன்றி துருப்புகளையும் கனரக ஆயுதங்களையும் துரிதமாக நிலைநிறுத்த அனுமதிக்கின்ற ஓர் இராணுவ சுதந்திரநடமாட்ட மண்டலம், கூட்டு செயற்கைக்கோள் வழி இராணுவக் கண்காணிப்பு, ஓர் ஐரோப்பிய மருத்துவக் கமாண்டோ மற்றும் கூட்டுத் தளவாட மையங்கள் ஆகியவை இவற்றில் இடம்பெற்றிருக்கின்றன. இந்த 47 திட்டங்களில் 10 டிசெம்பரில் தொடக்கி வைக்கப்பட இருக்கின்றன.

> **ஜேர்மனியும் பிரான்ஸும் தான் PESCO இன் பின்னால் இருக் கும் சக்திகளாக உள்ளன. சமீப மாதங்களில், ஆறு பயிலரங்குகளை நடத்தி பேர்லின், பரிஸ் மற்றும் பெல்ஜியம் இந்தத் திட்டத்தை விளம்பரப்படுத்தியிருக்கின்றன. பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவல் மக்ரோன், பாரிஸில் உள்ள சோர்போன் பல்கலைக் கழகத்தில் செப்ரெம்பரில் வழங்கிய ஒரு உரையின் போது அறிவித்தார். அடுத்த தசாப்தம் தொடங்குவதற்குள்ளாக,ஒரு கூட்டுத் தலையீட்டுப் படை, ஒரு பொதுப் பாதுகாப்பு வரவு-செலவு மற்றும் நடவடிக்கைக்கான ஒரு கூட்டு சித்தாந்தம் ஆகியவை ஐரோப்பாவிடம் இருந்தாக வேண்டும்.**



PESCO கையெழுத்தானது ஐரோப்பாவிற்கு ஒரு மகத்தான நாள் என்று ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சரான ஊர்சுலா வொன் டெர் லையன் (Ursula Von der Leyen) தெரிவித்தார். தரப்புகள் ஐரோப்பாவுக்கு ஒரு இராணுவத்தை நோக்கிய ஓர் முன்நோக்கிய அடியை எடுத்துக் கொண்டிருந்தன.

ஜேர்மன் வெளியுறவு அமைச்சரான சிக்மார் காப்ரியல் இந்த உடன்பாட்டை வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று வருணித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தின் பாதுகாப்புக் கொள்கையின் சுயாதீனம் மற்றும் வலுப்படுத்தலில் இது ஒரு முக்கிய நடவடிக்கை என்றார். PESCO இராணுவத் திறன்களில் ஒரு பெரும் அதிகரிப்பில் விளையும் என்று அவர் முன்கணித்தார்.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 11

## ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாட்டுப் பயணம் 05.01.1981

### அரங்கேறத் தவமிருந்த அறிஞர்கள்

வழக்கமாக அந்த அரங்கில் முற்பகல் 10 மணியளவில் ஆய்வரங்கம் ஆரம்பமாகும். அதற்கு முன்பாக வெளிநாடுகளில் இருந்து வருகை தந்திருக்கும் பேராளர்களில், மதிப்புமிக்க விருந்தினர் ஒரு சிலரைப் பொதுவாக அங்கு பேச அனுமதிப்பார்கள். அந்த அரங்கில் ஏற அறிஞர் மத்தியில் பெரிய போட்டி நடந்தது. இலங்கையில் இருந்து ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கவெனச் சென்ற அறிஞர்கள் பலரும், அந்த மேடையில் ஏறும் சந்தர்ப்பத்திற்காய்த் தவமிருந்தனர். அவர்களை எல்லாம் மாநாட்டு அமைப்பாளர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்த தனித்தனி வகுப்பறைகளில், ஒரு சிலருக்கு முன் நின்று ஆய்வுக்கட்டுரைகளை வாசிக்க விட்டு விட்டார்கள். இம் மேடையில் ஏற ஆசைப்பட்ட அவர்களுக்கு அதனால் பெரும் வருத்தம். எங்கள் ஆசிரியர்களின் நண்பரான தொல்புரம் வித்துவான் சிவபாதசுந்தரனார், அம் மேடை ஏறமுடியாத கவலையில் பின்னர் நோய்வாய்ப்பட்டும் போனார். இலங்கையில் இருந்து சென்றவர்களில், அப்போது அமைச்சராய் இருந்த செல்லையா இராசதுரையும், நாடாளுமன்ற உறுப்பினர் க.பொ.இரத்தினமும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.வித்தியானந்தனும் மட்டுமே, அம்மேடையில் பேச அனுமதிக்கப்பட்டவர்களாய் பின் அறிந்தோம். அப்படி அறிஞர்கள் ஏறத் தவமிருந்த அம்மேடையில், அதிஷ்டக் காற்று என்னைக் கொண்டு போய் நிறுத்தியது.

### இன்னும் ஒரு சில நிமிடமே!

அன்றைய விருந்தினர்கள் உரையில், சுவிஸ் நாட்டில் இருந்து வந்திருந்த ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி, முதலில் தமிழில் உரையாற்றினார். அதன் பின்பு, மலேசியாவில் இருந்து வந்திருந்த சுவாமி இராமதாஸ் என்பவர், உரையாற்றத் தொடங்கியிருந்தார். மாநாட்டுக்காரர்கள் அவரைச் சரியாக உபசரிக்கவில்லை போலும். அந்தக் கோபத்தில் தனது பேச்சில் அனைவரையும் அவர் திட்டித் தீர்த்தார். தொடர்ந்து இந்து, கிறிஸ்தவப் பகையை பரப்புமாற்போல் கிறிஸ்தவர்களைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார். அவர் பேச்சு எனக்கு எரிச்சலைத் தந்தது. அவரது பேச்சோடு ஆய்வரங்கு தொடங்கவிருந்தது. சபையில் எம்.ஜி. ஆர்., மேடையில் பேரறிஞர்கள், மண்டபம் நிறைந்த கூட்டம். இங்கு எப்படியும் பேசிவிட வேண்டும் என மனம் துடிக்க இருந்த ஓரிரு நிமிடங்களுக்குள், என்ன செய்யலாம்? என நானும் குமாரதாசனும் கடுமையாய் யோசித்தோம்.

### ஏமாந்த பொலிஸ்காரர்

எம்.ஜி.ஆர். வந்ததும், பொலிஸ் காவலால் மண்டபத்துக்கு அருகில் கூடப் போகமுடியவில்லை. அன்றைய நிகழ்ச்சிக்கு நீதிபதி கோகுலகிருஷ்ணன் என்பவர், தலைமை தாங்கிக் கொண்டிருந்தார். திடீரென ஒருயோசனை தோன்ற, குமாரதாசனின் கையில் இருந்த டயரியில் இருந்து ஒரு பேப்பரைக் கிழித்து, ''அகில இலங்கைக் கம்பன் கழகத்தில் இருந்து வந்திருக்கிறோம். இன்று எங்களை இங்கு பேச வரச்சொன்னார்கள், சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறோம்'' என எழுதி, அருகில் இருந்த ஒரு பொலிஸ்காரரிடம், ''மேடையில் இருக்கும் தலைவர் எங்களை இன்று வரச்சொன்னார்'' எனப் பொய் சொல்லி, ''இக்கடிதத்தை அவரிடம் சேர்ப்பியுங்கள்'' என்று கொடுத்தோம். எங்களின் நல்லகாலம் நாங்கள் சொன்னதை உண்மை என்று நம்பி, அந்த அப்பாவி பொலிஸ்காரர், அதனை மற்றொரு பொலிஸ்காரரிடம் கொடுக்க, இப்படி மாறிமாறி பொலிஸ்காரர்களின் கைகளூடு சென்ற கடிதம், இறுதியாய் மேடையில் இருந்த தலைவரைப் போய்ச் சேர்ந்தது. அது தேவதைகள் எங்களை ஆசீர்வதித்த நேரம் போலும். ஆச்சரியம்! தலைமை தாங்கிய நீதிபதியும் என்னை நினைத்தாரோ தெரியவில்லை. அக்கடிதத்தை நம்பிய அவரும், அடுத்து என்னைப் பேச அழைப்பதாய்ச்சொல்லி அனுப்பிய செய்தி, அதே பொலிஸ்காரர்களூடு எங்களை வந்து சேர்ந்தது. ஆச்சரியத்தில் அதிர்ந்து போனோம்.

### என்ன பேசுவது?

திடீரென, சந்தர்ப்பம் கிடைத்ததும் என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஓரிரு நிமிடத்துக்குள் முடிவு செய்தாக வேண்டிய சூழ்நிலை. அப்போது மேடையில் பேசிக் கொண்டிருந்த மலேசியக் காரர், மதத்தாலும் ஊராலும் தமிழர்களைப் பிரிக்குமாற்போல பேசியமை மனதுக்குள் எரிச்சலைக் கிளப்பி இருந்தது. அந்த நிமிடத்தில் புத்தியில் மின்னல் அடிக்க, தமிழினத்தின் ஒற்றுமையை வலியுறுத்திப் பேச வேண்டும் என முடிவு செய்தேன்.

### ஆச்சரியம்! ஆனால் உண்மை! மாநாட்டில் பேசினேன்

நிகழ்ச்சித் தலைவரான நீதிபதிக்கு கொடுத்தனுப்பிய கடிதத்தில், அக்கடிதத்தை எழுதிய குமாரதாசனே கையெழுத்து இட்டிருந்தார். அதனால் தலைவராக இருந்த நீதிபதி, எங்கள் கழகத்தின் பெயரையும், குமாரதாசனின் பெயரையும் சொல்லி, அடுத்துப் பேச அழைக்க, அதுபற்றிக் கவலைப்படாமல் நானே மேடைக்குச் சென்று பேசினேன். பதற்றத்தில் பெயர்மாற்றத்தைக் குறிப்பிடவும் மறந்து போனேன். தமிழின ஒற்றுமை பற்றி அன்றைய என் பேச்சு அமைந்தது. மாநாட்டு மண்டபம் முழுவதும், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற சங்கப் பாடல் வாசகம் எழுதப்பட்டிருந்தது. அதை வைத்தே என் பேச்சைத் தொடங்கினேன். ''யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது தமிழர்களின் லட்சியமா? அல்லது தமிழர்களுக்குள் இருந்த பேதங்களைப் பார்த்து, சங்கச் சான்றோர் அவர்களுக்குச் சொன்ன புத்திமதியா?'' என நான் கேட்டதும், முன்னைய பேச்சாளரின் பேச்சால் சலித்திருந்த சபை, அந்த எனது கூற்றை இரசித்துக் கைதட்டியது. எனக்குள் உற்சாகம்.

எம்.ஜி. ஆருக்கும் கலைஞருக்கும் இருந்த பகை காரணமாக, இம்மாநாட்டுக்கு கலைஞர்வரவில்லை. அது, அப்போது எங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டது. அதை வைத்து என்பேச்சைத் தொடர்ந்தேன். ''உலகத் தமிழர்களுக்குத் தாயகம் தமிழ் நாடு தான், ஈழத்தவர்களாகிய நாங்கள் மாமியார் வீட்டில் வசிக்கும் தமிழர்கள். தாய் வீடு ஒற்றுமையாய் இருந்தால் தான், மாமியார் வீட்டில் மகள் மரியாதையாக வாழலாம்'' என்றேன்.

என் பேச்சின் குறிப்பறிந்து சபை மீண்டும் கைதட்டியது. பிறகு, ''கலைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் பின்நின்றாலும்கூட, தமிழரின் உயர்வு என்று வரும்போது அவரும் அதற்கு உறுதுணையாய் நிற்பார்'' என நம்புகிறேன் எனச்சொல்லி, ஓர்இராமாயணப் பாடலை உதாரணமாய் எடுத்துக்காட்டினேன்.

இராம இராவண யுத்தத்தில், இராமன் தன் வில்லில் அம்பு ஏற்றியபோது அவனது வலக்கை பின்சென்றதாம். அதைக் கண்ட இடக்கை, ''இது வரை சீதா கல்யாணம் போன்ற, நல்ல விடயங்களுக்கு எல்லாம் முன்னால் ஓடிவந்த நீ, போர் என்றதும் பின்னே செல்கிறாயா?'' என்று நகைத்ததாம் அதற்கு வலக்கை, ''சண்டைக்குப் பயந்து நான் பின் செல்லவில்லை போர்க்களச் சத்தத்தில் பேசும் சத்தம் மற்றவர்களுக்குக் கேட்காது, அதனால் காகுத்தன் காதடியில் சென்று அம்பினை, இராவணனைக் கொல்லும் படி விடுவதா? தலைகள் பத்தும் கொய்யும் படி விடுவதா? என்று கேட்கவே சென்றேன்'' என்ற தாம். யாரோ சொல்லி கேள்விப்பட்ட இவ்விலக்கியச் செய்தியை, அங்கு சொல்லி அதற்கான பாடலையும் சொன்னேன் அதற்கும் பெரிய கைதட்டுக் கிடைத்தது. தொடர்ந்து, ''இது போல் மாநாட்டுக்கு வராமல் பின் நிற்பவர்களும், தமிழரின் நன்மை என்று வரும்போது துணை புரிவர்'' என நம்புவதாய் நான் சொல்ல, சபையில் இருந்த கலைஞரின் ஆதரவாளர்கள், பெரிதாய் கைதட்டி அதை வரவேற்றனர். அப்படி நான் பேசியமை எம்.ஜி. ஆருக்குப் பிடித்திருக்காது என்பதுகூட, அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை. சபை தந்த ஊக்கத்தில் ஏதோ பெரிய மனுசன் போல் அடித்துத் தள்ளினேன்.

மொத்தத்தில் சபையில் அன்றைய எனது பேச்சுக்குப் பெரும் வரவேற்பு கிடைத்தது. எனக்குப் பேச அனுமதிக்கப்பட்ட நேரம் மூன்று நிமிடங்கள் தான். என் நேரம் முடிந்ததும் நான் தலைவரைத் திரும்பிப் பார்க்க, சபையின் ஆரவாரம் கண்ட உற்சாகத்தில் அவரும், ''பேசுப்பா, பேசுப்பா'' என ஊக்குவித்து, என்னை ஒன்பது நிமிடங்கள் வரை பேசவிட்டார்.

(தொடரும்...)



# உன்னைச் சரணடைந்தேன்

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 1 - 30



# அகத்தி

## பயிர்ச்செய்கை

பொதுப் பெயர் - அகத்தி
தாவரவியல் பெயர்- Sesbania grandiflora

**மருத்துவ முக்கியத்துவம்**

★கண்ணிற்கும் பீனிச நோய்களுக்கும் ஏற்றது.
★வயிற்றில் புழுக்களை இல்லாது ஒழிக்கும்.
★உடலில் உள்ள நச்சுக்களை அகற்றும்.
★மலச்சிக்கலைத் தடுக்கும்.
★மயிர் வளர்ச்சிக்கு உதவும்.
★புற்றுநோய் ஏற்படுவதைத் தடுப்பதோடு புற்று நோயைக் கட்டுப்படுத்தவும் உதவும்.
★இரும்புச்சத்தை கொண்டது.

**இனங்கள்**

1.வெள்ளைப் பூ அகத்தி.
2.சிவப்பு பூ அகத்தி.
3.அரிதாக பூக்கும் வர்க்கம்./ஹரித்த

**தேவையான காலநிலை**

உலர் வலயத்தில் அகத்தியை வெற்றிகரமாக பயிரிடலாம். ஏனெனில் அகத்திக்கு சூடான காலநிலை மிகவும் உகந்தது.

**நாற்றுக்களைத் தோட்டத்தில் நடுகை செய்தல்**

★நாற்றுக்களை வேர்கள் பாதிக்கப்படாதவாறு பெற்றுக்கொள்ள வேண்டும்.
★பைகளில் உற்பத்தி செய்யப்பட்ட நாற்றுக்கள் மிகவும் பொருத்தமானவை.
★நடுகை குழியை 45X45X45 cm அளவில் தயார் செய்தல் வேண்டும்.
★கூட்டெரு/ சாணம், மேல் மண் என்பன கலந்து நடுகைக்குழியை மூடிவிடுதல் வேண்டும்.
★கன்றுகளை நட்ட பின்னர் சில நாள்களுக்கு நிழல் வழங்குதல் வேண்டும்.
★நடுகைக்கு நிழலான இடங்களைத் தெரிவு செய்தலை தவிர்த்தல்.

**ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நட வேண்டும்.**

**பசளை இடல்**

5- 6 மாதங்களுக்கு ஒரு தடவை மாட்டெரு, கூட்டெரு, கோழி எரு என்பன இடுதல் சிறந்தது.

**அறுவடை செய்தல்**

★நடுகை செய்து 8 மாதங்களின் பின்னர் இலைகளையும் ஒரு வருடத்தின் பின்னர் பூக்களையும் விளைச்சலாகப் பெறமுடியும்.
★இலைகள் மாத்திரம் அவசியமாயின் பூ அரும்புகள் தோன்றும் போதே அவற்றை அகற்றிவிடல் வேண்டும்.
★காலத்திற்குக் காலம் கத்தரிப்பதன் மூலம் அதிக இலைகளை பெற்றுக்கொள்ளலாம்.

**கத்தரித்தல்**

★மரம் ஒரு மீற்றர் உயரம் வரை வளர்ந்த பின்னர் நுனி அரும்பை வெட்டிவிடுதல்.
★பின் பல திசைகளிலும் வளரக்கூடியவாறு 3-4 கிளைகளை மாத்திரம் மீதமாக விட்டு ஏனையவற்றை கத்தரிக்கவும்.
★இப் பக்கக் கிளைகளை 1 - 1.5 மீற்றர் வரை வளர்ந்த பின்னர் மீண்டும் அவற்றின் நுனியைக் கத்தரிக்கவும்.

*பிரதி மாகாண விவசாயத் திணைக்களம்*
*கிளிநொச்சி.*

# யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கண்காட்சி






யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை செயன்முறைத் தொழில்நுட்ப திறன்கள் கண்காட்சி பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்றது. செயன்முறைத் தொழில்நுட்ப மன்றத்தின் ஏற்பாட்டில் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கணிதப் பேராசிரியர் சி.சிறி சற்குணராசா கலந்து கொண்டார். கண்காட்சியின் சில பதிவுகள்... (இ)











## சாவகச்சேரி, மீசாலைப் பகுதிகளில் அனந்தியின் வாழ்வாதார உதவி











வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனால் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் 2017 ஆம் ஆண்டிற்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை(CBG) நிதி யிலிருந்து, சாவகச்சேரி மற்றும் மீசாலை பகுதிகளைச் சேர்ந்த பயனாளிகளுக்கு கடந்த புதன்கிழமை மாடுகள் வழங்கப்பட்டன.

இதே போன்று சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பத்திற்கும் கோழி வளர்ப்பிற்கான உதவி வழங்கப்பட்டது. சாவகச்சேரி கால்நடை வைத்தியசாலை வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோழிக்குஞ்சுகள், கோழிக்கூடு மற்றும் கோழித் தீவன உபகரணங்கள் என்பன அமைச்சரால் வழங்கப்பட்டன.

திருநெல்வேலியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு கோழி வளர்ப்பதற்கான உதவித் தொகை காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி அரச கால்நடை வைத்திய சாலை வளாகத்தில் வைத்து அமைச்சர் அனந்தி சசிதரனால் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (இ)

# தெல்லிப்பழையில் லயன்ஸ் கழகத்தால் 120 பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள்

## லயன் அமுதா கோபாலனின் அனுசரணையில்




கொழும்பு,கொட்டாஞ்சேனை வட்ட லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் கலாநிதி அமுதா கோபாலனின் அனுசரணையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 45 பேருக்கு 120 இற்கும் மேற்பட்ட பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

அமெரிக்காவில் இருந்து வைத்திய நிபுணரும் உலகத்திலேயே சிறந்த பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைநிபுணருமாகிய வைத்திய கலாநிதி போரா தலைமையில் நான்கு வைத்திய நிபுணர்கள், வைத்திய உத்தியோகத்தர்கள் அடங்கிய 30 பேர் கொண்ட குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையை வந்தடைந்தது.

கடந்த திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை தொடர்ந்து இந்தக் குழு சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையின் 4 சத்திரசிகிச்சைக் கூடங்களும் ஒழுங்கமைக்கப்பட்டு இந்த சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிகழ்வின் அங்குரார்ப்பணத்தை லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் கமிலஸ் பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்து ஆரம்பித்து வைத்தார்.

யுத்தத்தால் ஏற்பட்ட தழும்புகள், எரிகாயங்கள் எனப் பல தரப்பட்ட வடுக்களுக்குச் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

ஒரே நோயாளிக்கு முகம், கை, கால் என மூன்று இடங்களிலும் கூட சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை தொடர்பாக லயன் கலாநிதி அமுதா கோபாலன் ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த மண்ணில் எத்தனையோ பேர், குறிப்பாக பெண்கள் தமது அவயவங்களில் காணப்படுகின்ற தழும்புகள் காரணமாக சமூகத்தில் முன் வந்து இயல்பான வாழ்வை நடத்தமுடியாமல் உள்ளனர். அவர்களின் வாழ்வை ஒளிரச் செய்வதே எனது நோக்கம்.

நான் கொழும்பு றோயல் கல்லூரியில் 30 வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றினேன். நான் அங்கு கற்பித்த காலத்தில் என்னிடம் கல்வி கற்ற மாணவர்கள் இன்று உலகெங்கும் உள்ளார்கள். இந்த உலக மயப்படுத்தப்பட்ட என் ஆசிரியத்துவப் பணி காரணமாகத் தான் இவ்வாறான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை என்னால் ஒழுங்கமைக்க முடிந்தது.

கடந்த வருடம் மூன்று நாள்கள் 40 பேருக்கு இதே வைத்திய சாலையில் சிகிச்சையளித்தோம். இந்த வருடம் 45 பேருக்கு 120 இற்கும் மேற்பட்ட சத்திரசிகிச்சைகளைச் செய்திருக்கின்றோம்.

எனக்கு இந்தச் சேவை மிகுந்த மன நிறைவைத் தருகின்றது. சிகிச்சை பெற வாடி வதங்கி வந்தவர்கள், சிகிச்சை முடிந்து வீடு திரும்பும்போது மிகுந்த முக மலர்ச்சியுடன் செல்கின்றார்கள். இத்துடன் இந்தச் சேவை நின்று விடவில்லை. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இதற்கான ஒழுங்குகளைச் செய்வேன்- என்றார். (இ)







# ஜெயா வீட்டில் மீட்ட கணினிகளில் பல முக்கிய இரகசியத் தகவல்கள்?

சென்னை, நவ.20


ஜெயலலிதா வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட கணினிகளில் பல முக்கிய இரகசியத் தகவல்கள் உள்ளன என்று கூறப்படுகிறது. அது குறித்து தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் வருமான வரித் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகிறார்கள்.

சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் சசிகலாவின் உறவினர்களின் வீடுகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள் எனப் பல இடங்களில் வருமான வரித் துறை அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி ஏராளமான ஆவணங்களைக் கைப்பற்றினார்கள். சோதனையை தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு 'சம்மன்' அனுப்பி சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரி புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்கு வரவழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



நிபுணர்கள் மூலம் துருவித் துருவி ஆராய்வு





விசாரணைக்காக ஆஜராகுமாறு சசிகலாவின் உறவினர் இளவரசியின் மகள் ஷகிலா மற்றும் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றன் ஆகியோருக்கு அதிகாரிகள் சம்மன் அனுப்பி இருந்தனர். அதை ஏற்று ஷகிலாவும், பூங்குன்றனும் வருமானவரி புலனாய்வு பிரிவு அலுவலகத் துக்கு வந்தனர். அவர்களிடம் சுமார் 3 மணி நேரத்துக்கு மேல் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

அவர்களுடைய இல்லத்தில் எடுக்கப்பட்ட ஆவணங்கள்.அடிப்படையில் பல்வேறு விதமான கேள்விகளை அதிகாரிகள் கேட்டனர். இரவு 8 மணிக்கு பின்னரும் அவர்களிடம் விசாரணை நீடித்தது.

பின்னர் 9.30 மணி அளவில் அதிகாரிகள் ஷகிலாவையும், பூங்குன்றனையும் அங்கிருந்து போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். போயஸ் கார்டன் இல்லம் நினைவு இல்லம் ஆக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ள நிலையில், நீதிமன்ற உத்தரவு பெற்று, சோதனை நடத்துவதற்காக அந்த இல்லத்துக்குள் இரவு 9.30 மணி அளவில் பத்துக்கும் மேற்பட்ட வருமான வரித் துறை அதிகாரிகள் நுழைந்தனர்.

சோதனை நடத்துவதற்காக அதிகாரிகள் வந்திருக்கின்றமையை அறிந்த டி.டி.வி.தினகரன் ஆதரவாளர்கள் அங்கு குவியத் தொடங்கினார்கள். வருமான வரி சோதனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கோஷங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து வாகனங்களில் ஏற்றினார்கள்.

போயஸ் கார்டன் இல்லத்தில் சோதனை நடப்பது பற்றிய தகவல் கிடைத்ததும் ஷகிலாவின் சகோதரரும், ஜெயா டி.வி.யின் தலைமை செயல் அதிகாரியுமான விவேக் அங்கு விரைந்து வந்தார். ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபாவும் அங்கு வந்தார். அவர், வீட்டுக்குள் செல்ல தன்னை அனுமதிக்க வேண்டும் என்று கூறி பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஆனால், பொலிஸார் அவரை அனுமதிக்கவில்லை.

அப்போது தீபா நிருபர்களிடம் கூறுகையில், போயஸ் கார்டன் இல்லம் தற்போது சசிகலா குடும்பத்தின் வசம் தான் இருக்கிறது என்றும், அரசு கையகப்படுத்திவிட்டது எனச் சொல்வது பொய் என்றும், மறைக்கப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்காகத்தான் இந்தச் சோதனை நடைபெறுகிறது என்றும் கூறினார்.

சசிகலா உறவினர்களின் ஒத்துழைப்புடன்தான் சோதனை நடைபெறுகின்றது எனவும் கூறிய அவர், ஜெயலலிதா வுக்கு அவமானத்தை உரு வாக்கி, கெட்ட பெயரை ஏற்படுத்திவிட்டார்கள் என்றும் குற்றஞ்சாட்டினார்.

ஜெயலலிதா இருந்த கட்டடத்தின் அருகே உள்ள மற்றொரு கட்டடத்தின் முதல் தளத்தில் உள்ள ஓர் அறையில் தான் அவருடைய உதவியாளரான பூங்குன்றன் இருந்தார். அந்த அறையில் அதிகாரிகள் சோதனை போட்டார்கள். சசிகலா தங்கி இருந்த அறை உள்ளிட்ட 3 அறைகளிலும் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

நள்ளிரவு 2 மணி வரை சுமார் 4 மணி நேரம் நீடித்த இந்தச் சோதனையின் போது 2 பென்டிரைவ்கள், 2 லப்டொப்கள் ஆகியவற்றை அவர்கள் கைப்பற்றினார்கள். பூங்குன்றன் அறையில் இருந்து, ஜெயலலிதாவுக்கு வந்திருந்த கடிதங்களும், அவர் எழுதிய கடிதங்கள் தொடர்பான ஏராளமான ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன. பூங்குன்றனிடம் அதிகாரிகள் கேள்விகளை எழுப்பி, அவர் அளித்த பதில்களை வீடியோவாகவும், எழுத்து மூலமும் பதிவு செய்து கொண்டனர். சோதனை முடிந்ததும் ஆவணங்களை அங்கிருந்து பொலிஸாரின் வாகனங்களில் எடுத்துச் சென்றனர்.

சிலரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் மூலம், போயஸ் கார்டன் இல்லத்தில் உள்ள சசிகலா, பூங்குன்றன் ஆகியோரின் அறைகள் உள்ளிட்ட சில அறைகளில் இருக்கும் முக்கிய ஆவணங்களைச் சிலர் அங்கிருந்து இரகசியமாக எடுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர் எனத் தெரிய வந்தது எனவும், மேலும் டில்லியில் இருந்தும் சில முக்கிய தகவல்கள் கிடைத்தனஎனவும் கூறப்படுகிறது. இதனால்தான் வெள்ளி இரவு வருமான வரி அதிகாரிகள் அதிரடியாக போயஸ் கார்டன் இல்லத்துக்குச் சென்று சோதனை நடத்தி இருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு, அவரது வீட்டில் இருந்த முக்கிய ஆவணங்கள் அழிக்கப்பட்டு இருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள்.

இதனால் தற்போது அங்கு கைப்பற்றப்பட்ட பென்டிரைவ்கள், லாப்டொப் கணினிகளில் அது தொடர்பான இரகசிய தகவல்கள் சேமிக்கப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் கருதுகிறார்களாம். அப்படி ஏதும் உள்ளதா என்பதை அறிய அவற்றை தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் வருமான வரித் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகிறார்கள். வருவாய் புலனாய்வுப் பிரிவு அலுவலகத்தில் இந்த பணி நடந்து வருகிறது.

வருமான வரித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்டோரைத்தனித்தனியாக அழைத்து விசாரணை நடத்த திட்டமிட்டு உள்ளனர். மேலும், தேவைப்பட்டால்பெங்களூரு சிறையில் இருக்கும் சசிகலா, இளவரசி ஆகியோரிடமும் அவர்கள் விசாரணை நடத்த வாய்ப்பு இருக்கின்றது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஜெயலலிதாவின்போயஸ் கார்டன் இல்லத்தில் 21 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது சோதனை நடத்தப்பட்டு இருக்கிறது. கடந்த 1996ஆம் ஆண்டு லஞ்ச ஒழிப்பு பொலிஸார் போயஸ் கார்டன் இல்லத்தில் சோதனை மேற்கொண்டனர். அதன்பின்னர், தற்போது வருமான வரி சோதனை நடந்து இருக்கிறது.

# குற்றவாளிகள் கதி இனிமேல் சிறை அல்லது 'என்கவுண்டர்'

காசியாபாத்,நவ.20

உத்தரப் பிரதேசத்தில் குற்றவாளிகள் சிறைக்கு செல்வார்கள் அல்லது பொலிஸ் 'என்கவுண்டர்களில்' கொல்லப்படுவார்கள் என முதலமைச்சர் யோகி கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளது. இதற்காக காசியாபாத் நகரில் உள்ள ராம்லீலா மைதானத்தில் நடந்த பேரணியில் கலந்து கொண்டு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பேசினார்.



## உத்தரப் பிரதேச முதல்வர் அறிவிப்பு

அவர் பேசும்பொழுது, கடந்த மார்ச் மாதத்திற்கு முன்பு தொழிற்சாலைகள், வர்த்தகர்கள் மற்றும் இளைஞர்கள் குற்றச் செயல் மற்றும் ஒழுங்கற்ற நிலை ஆகியவற்றால் மாநிலத்தில் இருந்து வெளியேறும் நிலைமை இருந்தது.

எனினும், பாரதீய ஜனதா பதவியேற்ற பின்னர் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலை முன்னேறியுள்ளது எனக் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர், குற்றவாளிகள் சிறைக்குச் செல்வார்கள் அல்லது அவர்கள் பொலிஸ் என்கவுண்டரில் கொல்லப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

(உ)

# உலக அழகியானார் இந்தியாவின் மனுஷி

'மிஸ் வேர்ல்ட் - 2017' நிகழ்வில் மகுடம் சூடினார்



பெய்ஜிங், நவ.20

இந்தியாவின் மனுஷி சில்லர் உலக அழகி( மிஸ் வேர்ல்டு - 2017 ) போட்டியில் மகுடம் சூடினார்.

சீனாவின் சான்யா நகரில் 'மிஸ் வேர்ல்டு - 2017' போட்டி நடந்தது. இந்த போட்டியில் முதல் 5 இடங்களில் இங்கிலாந்து, பிரான்ஸ், கென்யா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுடன் இந்தியாவின் மனுஷி இடம் பிடித்துள்ளார்.

அரியானாவை சேர்ந்த 20 வயது நிறைந்த மருத்துவ மாணவியான மனுஷி இந்த வருடம் மே மாதம் நடந்த 'பெமினா மிஸ் இந்தியா வேர்ல்ட் - 2017' போட்டியில் பட்டம் பெற்றவர்.

அவர் அழகி போட்டியில் வெற்றி பெற்றமை பற்றி டுவிட்டரில் வெளியிடப்பட்டு உள்ளது.2ஆவது மற்றும் 3ஆவது இடங்களை மிஸ் இங்கிலாந்து ஸ்டெபானி ஹில் மற்றும் மிஸ் மெக்சிகோ ஆண்ட்ரியா மெஜா பிடித்துள்ளனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு இறுதியாக இந்தியாவின் பிரி யங்கா சோப்ரா இந்த பட்டத்தை வென்றார். அதற்கு முந்தைய வருடம் யுக்தா முகி வெற்றி பெற்று இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தார்.

1994ஆம் ஆண்டு ஐஸ்வர்யா ராயும், 1997ஆம் ஆண்டில் டையானா ஹெய்டனும் இந்த பட்டம் வென்றனர். 1966 ஆம் ஆண்டு முதன்முதலில் ரீட்டா பரியா உலக அழகி பட்டத்தை வென்ற இந்தியராவார்.

# ஸிம்பாப்வே நிலைவரம்:

# தான் நிறுவிய கட்சியில் இருந்தே வெளியேற்றப்படுகின்றார் முகாபே

## இனி அவர் அதிகாரத்துக்குத் திரும்ப வாய்ப்பேயில்லை



ஹராரே,நவ.20

ஸிம்பாப்வே அதிபர் றொபேர்ட் முகாபே பதவி விலக வேண்டும் என்ற கடுமையான அழுத்தங்களுக்கு மத்தியில், அந்நாட்டு இராணுவத் தலைவரை முகாபே சந்திக்க உள்ளார்.

இந்த மத்தியஸ்தம் ஒரு கத்தோலிக்க பாதிரியாரால் நடத்தப்படுகிறது என அரசு தொலைக் காட்சி கூறியுள்ளது.

ஸிம்பாப்வேயை ஆளும் ஜானு பி எவ் கட்சியின் நிறுவுநரும், நீண்ட காலத் தலைவருமான றொபேர்ட் முகாபேயை கட்சியில் இருந்து நீக்குவதா என்பதை முடிவு செய்ய ஜானு பி எவ் கட்சியின் கூட்டம் கூட உள்ளது,

தனது மனைவியும், தன்னை விட 40ஆண்டுகள் சிறியவருமான கிரெஸ் முகாபே அடுத்த அதிபர் ஆவதற்கு வழிவகுப்பதற்காக, நாட்டின் துணை அதிபரான எமர்சன் மனங்காக்வுவாவை கடந்த வாரம் பதவியிலிருந்து நீக்கினார் முகாபே.

பதவிக்கான போராட்டத்தால், 37 ஆண்டுகளாக அந்நாட்டை ஆண்டுவந்த முகாபேவுக்கு எதிராக அந்த நாட்டின் இராணுவம் நடவடிக்கையை மேற்கொண்டது.

ஸிம்பாப்வே 1980இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து முகாபே அந்நாட்டை ஆட்சி செய்து வருகிறார்.

இராணுவம் ஆட்சியைக் கையில் எடுத்ததைக் கொண்டாடும் விதமாக, சனிக்கிழமையன்று ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் கூடி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மேலும், முகாபே பதவி விலக வேண்டும் எனவும் மக்கள் வலியுறுத்தினர்.

ஜானு-பி.எஃப் கட்சியின் பத்தில் ஒன்பது மாநில கிளைகளும், முகாபே பதவி விலக வேண்டும் எனக் கூறியுள்ளன. நேற்று நடக்கவிருந்த கட்சியின் உயர்மட்ட அமைப்பான, மத்தியக் குழுக் கூட்டத்தில் ஒன்பது மாநில கிளைகளின் முடிவுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வாய்ப்புகள் காணப்பட்டன.

''இது ஒரு திருப்புமுனை. முகாபே மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கான வாய்ப்புகளே இல்லை'' என்கிறார் தலைநகர் ஹராரேவில் உள்ள பி.பி.ஸி. செய்தியாளர் ஆண்ட்ரூ ஹார்டிங்.

# அமெ. பாதுகாப்பு 'பட்ஜெட்' பெருந்தொகை ஒதுக்கீடு

அமெரிக்க பாதுகாப்பு 'பட்ஜெட்' அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் இராணுவத்துக்கு (இந்தியப் பணத்தில்) ரூ.45 லட்சம் கோடி பெறுமதிக்கு நிகரான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு பட்ஜெட் - 2018 செனட் சபையில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மக்கள் பிரதிநிதித்துவ சபையில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 356 பேர் வாக்களித்தனர். 70 பேர் எதிராக வாக்களித்தனர். எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 127 எம்.பிக்கள் பட்ஜெட்டுக்கு ஆதரவு அளித்துள்ளனர். இதுவரை இல்லாத அளவுக்கு பாதுகாப்பு பட்ஜெட்டுக்கு ரூ.45,51,050 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

# தென் அட்லாண்டிக் கடலில் மர்மமாக மறைந்த ஆர்ஜெண்டீன நீர்மூழ்கியிலிருந்து சமிக்ஞைகள்?




புவனர்ஸ் அயர்ஸ், நவ.20

நான்கு நாள்களாகத் தொடர்பாடலை இழந்துவிட்ட - 44 ஊழியர்களை கொண்ட - நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணியை ஆர்ஜெண்டீனா கடற்படை தென் அட்லாண்டிக்கில் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், தற்போது சில சமிக்ஞைகள் (சிக்னல்கள்) கிடைத்துள்ளன எனவும், அவை காணாமற்போன கப்பலில் இருந்து வந்திருக்கலாம் எனவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால், கப்பலில் இருந்த 44 பேர் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள்ளது

கடற்படையோடு கடைசியாகக் கடந்த புதன்கிழமை காலை நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பு கொண்டுள்ளது..

சனிக்கிழமை ஏழு தோல்வியுற்ற செயற்கைக்கோள் அழைப்புகள் ஆர்ஜெண்டீனா கடற்படைக்கு வந்தன. தற்போது, அந்த அழைப்புகள் செய்யப்பட்ட இடத்தைக் கண்டறியும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடலில் கரையிலிருந்து 430 கிலோமீற்றர் தொலைவிற்கு அப்பால் சன் குவான் என்ற அந்த நீர்மூழ்கிக் கப்பல் காணாமற்போனது.

கப்பலைக் கூடிய சீக்கிரம் கண்டுபிடிப்பதற்கு உதவ தேசிய மற்றும் சர்வதேச ஆதாரங்கள் அனைத்தும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அதிபர் மௌரீசியோ மார்க்ரி தெரிவித்துள்ளார். இந்த கப்பலைத் தேடும் பணியில் நாஸாவின் ஆய்வுக் கப்பலும் இணைந்துள்ளது. பிரிட்டனும், அந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகளும் உதவி வழங்குவதாகத் தெரிவித்துள்ளன.

தென்னமெரிக்காவின் தெற்கு முனை பகுதிக்கு அருகில் வழக்கமான சேவையில் இருந்து, அதனுடைய தளமான புவர்னஸ் அயர்ஸின் தெற்கிலுள்ள மார் டெல் பிலாடாவுக்கு டீசல்-மின்சார சக்தியால் இயங்கும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் திரும்பி வந்து கொண்டிருந்தது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் கடைசியாக இருந்ததாக அறியப்படும் தென் கிழக்கு வல்டெஸ் தீபகற்பத்தில் ஆர்ஜெண்டீனாவின் போர்க் கப்பல் மற்றும் இரண்டு வழித்துணைக் கப்பல்கள் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து வருகின்றன.

கடும் காற்றாலும், உயரமான அலைகளாலும் மீட்பு உதவியாளர்களின் பணி மேலும் சிக்கலாகியுள்ளது.

(உ)

# டோனியின் எதிர்காலத்தைத் தேர்வாளர்களே முடிவு செய்ய வேண்டும் என்கிறார் கபில்தேவ்





இந்திய அணியின்விக்கெட் காப்பாளராக செயல்பட்டு வரும்மகேந்திரசிங்டோனியின் எதிர்காலத்தை தேர்வாளர்கள் மட்டுமே முடிவு செய்யவேண்டும் என கபில்தேவ் கூறியுள்ளார்.

இந்திய அணியின் 'சாதனைக் கப்டனாக' திகழ்ந்தவர் மகேந்திர சிங் டோனி. டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற இவர், இந்த வருட தொடக்கத்தில் ஒருநாள் மற்றும் ரி20 அணித் தலைவர் பதவியில் இருந்து விலகி, 'விக்கெட் காப்பாளராக-பேட்ஸ்மேனாக' விளையாடி வருகிறார்.

சமீப காலகமாக டோனி ஓய்வு பெற வேண்டும் என்ற விமர்சனம் எழுந்துள்ளது. நியூஸிலாந்து ரி20 தொடரின்போது, 2ஆவது போட்டியில் அவர் மோசமாக விளையாடினார்.

இதனால் டோனி விலகி இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற விமர்சனம் கடுமையாக எழும்பியது.


இந்நிலையில், டோனியின் ஓய்வு முடிவைத் தேர்வாளர்கள் மட்டுமே தீர்மானிக்க வேண்டும் எனக் கபில்தேவ் கூறியுள்ளார்.

டோனியின் ஓய்வு குறித்து கபில்தேவ் கூறுகையில் "எந்த வீரரும் அவருடைய வாழ்நாள் முழுவதும் விளையாட முடியாது. ஆனால், டோனி சிறப்பாக விளையாடி வருகிறார். அவரது முடிவை தேர்வாளர்களிடம் விட்டு விடுகிறேன். நாம் என்ன செய்கின்றமோ அதை விடத் தேர்வாளர்கள் சிறந்த வேலையைச் செய்வார்கள்.

நான் ஏதாவது சொன்னால் அது மக்களிடம் குழப்பத்தை ஏற்படுத்திவிடும். அதைச் செய்ய நான் விரும்பவில்லை. தேர்வாளர்கள்தான் அதைச் செய்ய வேண்டும்" - என்றார்.

(உ)

# ரோஜர் பெடரர் அதிர்ச்சித் தோல்வி



லண்டன், நவ.20

'ஏ.டி.பி. உலக டூர் இறுதி சுற்று' எனப்படும் உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது.

முன்னணி 8 வீரர்கள் மட்டுமே கலந்து கொண்ட இந்தப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த அரைஇறுதியில் 2ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிற்ஸர்லாந்து), 8ஆம் நிலை வீரர் டேவிட் கோபினை (பெல்ஜியம்) எதிர் கொண்டு அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஒரு மணி 45 நிமிடங்கள் நீடித்த பரபரப்பான இந்த மோதலில் 6 முறை சம்பியனான பெடரர் 6-2, 3-6, 4-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். இதற்கு முன்பு டேவிட் கோபினை சந்தித்த 6 ஆட்டங்களிலும் வெற்றி கண்டிருந்த பெடரர், அவரிடம் முதல்முறையாக மண் கவ்வி இருக்கிறார்.

இந்தப் போட்டிக்கு முதல்முறையாக தகுதி பெற்றிருந்த 26 வயதான டேவிட் கோபின், முதல் முயற்சியிலேயே இறுதிப் போட்டிக்கு வந்து வியக்க வைத்துள்ளார். இறுதி ஆட்டத்தில் டிமிட்ரோவ் (பல்கேரியா) அல்லது ஜாக் சோக் (அமெரிக்கா) ஆகியோரில் ஒருவரை கோபின் சந்திப்பார்.

# 57 ஸிக்ஸர்கள், 27 பவுண்டரிகளுடன் ஒரு நாள் ஆட்டத்தில் 490 ஓட்டங்கள்

## தென்னாபிரிக்க வீரர் சாதனை



தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஷேன் டேட்ஸ்வெல் ஒருநாள் போட்டியில் அதிரடியாக விளையாடி 490 ஓட்டங்கள் எடுத்து சாதனை புரிந்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் உள்ளூர் அணிகளுக்கு இடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அங்குள்ள நோர்த் வெஸ்ட் யுனிவர்சிடி புக்கே அணிக்கும், போட்ச் டார்ப் அணிக்கும் இடையே நேற்று முன்தினம் ஒருநாள் போட்டி நடை பெற்றது. முதலில் விளையாடிய நோர்த் வெஸ்ட் அணி வீரர்கள் சிறப்பாக விளையாடினர்.

குறிப்பாக, அந்த அணியை சேர்ந்த ஷேன் டேட்ஸ்வெல் அதிரடியாக விளையாடினார். தொடக்கத்தில் இருந்தே பந்துகளை மைதானம் முழுக்க பறக்கவிட்டார்.

இறுதியில், 151 பந்துகளில் 57 சிக்ஸர்கள் மற்றும் 27 பவுண்டரிகளுடன் 490 ஓட்டங்கள் எடுத்தார். அவருடன் விளையாடிய மற்றொரு வீரர் ருவான் ஹாஸ்புருக் 54 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 12 பவுண்டரிகளுடன் 104 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 677 ஓட்டங்கள் எடுத்தது.

# பயிற்சியாளரை விட்டு பிரிந்தார் ஆண்டி முர்ரே



லண்டன்,நவ.20

முன்னாள் 'நம்பர் வன்' டென்னிஸ் வீரர் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, தனது பயிற்சியாளர் இவான் லென்டிலை பரஸ்பர பேச்சுகளின் அடிப்படையில் பிரிந்துள்ளார் என அறிவித்துள்ளார்.

டென்னிஸ் ஜாம்பவானான லென்டில் ஏற்கனவே 2011 முதல் 2014 ஆம் ஆண்டு வரை முர்ரேவுக்கு பயிற்சியாளராக பணியாற்றினார். பிறகு அவரை விட்டுப் பிரிந்த லென்டில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் மறுபடியும் கைகோத்தார்.

அவரதுபயிற்சியின்உதவியுடன்விம்பிள்டன் பட்டம், ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் ஆகியவற்றை வென்றதுடன், நம்பர் ஒன் இடத்தையும் பிடித்து முர்ரே அசத்தினார். ஆனால் காயத்தால் இந்த ஆண்டில் தடுமாறிய ஆண்டி முர்ரே தரவரிசையில் 16 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இதையடுத்து புதிய பருவகாலத்தை வேறு ஒரு பயிற்சியாளருடன் எதிர்கொள்ள முர்ரே தயாராகி வருகிறார்.

(உ)

# சென்னை அணியில் ரெய்னா இல்லை!



சென்னை அணியில் இருந்து ரெய்னா உள்ளிட்ட பல வீரர்கள் கழற்றி விடப்படுவர் எனத் தெரிகிறது.

கடந்த 2013 இல் நடந்த ஆறாவது ஐ.பி.எல்., தொடரில் ஏற்பட்ட சூதாட்ட பிரச்சினையால், சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு ஆண்டு (2016, 2017) தடை விதிக்கப்பட்டது.

இந்த இரு அணிகளின் பெரும் பாலான வீரர்கள் புதியதாக உருவான குஜராத், புனே அணிகளுக்குச் சென்றனர்.

தற்போது தடை முடிந்த நிலையில் இந்த ஆண்டு முதல் சென்னை, ராஜஸ்தான் அணிகள் தொடரில் பங்கேற்க உள்ளன. இதற்கான வீரர்கள் ஏலம் அடுத்த ஆண்டு நடக்க உள்ளது. இதில் 500க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்பர் எனத் தெரிகிறது.

இதற்கிடையே, வீரர்களை தக்க வைத்துக் கொள்ளும் 'கொள்கை' விதிப்படி, வரும் 21 ஆம் திகதிக்குள் ஒவ்வொரு அணியும் 2 இந்தியர், ஒரு வெளிநாடு என, மொத்தம் 3 வீரர்களைத் தவிர, மற்றவர்களை விடுவிக்க வேண்டும்.

இதன்படி, சென்னை, ராஜஸ்தான் அணிகள், புனே மற்றும் குஜராத் அணியில் இருந்து தலா 3 வீரர்களை எடுத்துக் கொள்ளலாம். இந்த அடிப்படையில் புனே அணி யில் உள்ள டோனி மீண்டும் சென் னைக்குத் திரும்புகின்றமை உறுதியாகி உள்ளது. தவிர, முன்னணி 'சுழல்' வீரர் அஸ்வின், டுபிளசிஸ்ஸை தக்க வைக்க அணி முடிவு செய்துள்ளதாம்.

**ரெய்னா இல்லை**

இதனால் 8 ஆண்டுகள் அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்தி, தமிழக ரசிகர்களை கவர்ந்த ரெய்னா, சென்னை அணிக்காக இனிமேல் பங்கேற்க மாட்டார் எனத் தெரிகிறது. தவிர, இவர் குஜராத் அணிகப்டனாக இருக்கின்றமையால், சென்னை வருவது சிரமம் தான்.

இதேபோல, 'பல்துறை வல்லுநர்' பிராவோவும், சென்னை அணிக்கு வருகின்றமை சந்தேகமாக உள்ளது.

(உ)

# 500 சிக்ஸர்கள் சாதனை; எட்டினார் பொல்லார்ட்!



ரி 20 கிரிக்கெட் போட்டியில் 500 ஸிக்ஸர்கள் விளாசி மேற்கிந்திய தீவுகள் அணி வீரரான கிரோன் பொல்லார்ட் சாதனை படைத்துள்ளார்.


வங்கதேசத்தில் நடைபெறும் பிறிமியர் லீக் போட்டியில் டாக்கா அணிக்காக பொல்லார்ட் விளையாடி வருகிறார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் டாக்கா டைனமைட்ஸ் அணி ராஜ் ஷஹி கிங்ஸ் அணியை எதிர்கொண்டது. இதில் 25 பந்துகளில் மூன்று ஸிக்ஸர்கள் விளாசிய பொல் லார்ட் 5 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்கள் எடுத்தார்.

இன்றைய போட்டியில் மூன்று சிக்ஸர்கள் அடித்தமையின் மூலம், ஒட்டுமொத்தமாக 500 சிக்ஸர்கள் விளாசி புதிய சாதனை படைத் துள்ளார் அவர்.

772 ஸிக்ஸர்களுடன் கெய்ல் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீனஸ் வில்லியம்ஸின் வீட்டில் பெரும் திருட்டு



பிரபல டென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸின் புளோரிடா இல்லத்தில் 4 லட்சம் டொலர் மதிப்பிலான பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் விளையாடி வருகிறார், இவருக்கு 10 ஆயிரம் சதுர அடி கொண்ட வீடு புளோரிடா மாகாணத்தில் உள்ளது.

அங்கு திருட்டு நடைபெற்றுள்ளது என கடற்கரை பூங்கா பொலிஸுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

'செப்ரெம்பர் 1 முதல் 5 வரையிலான காலகட்டத் திலேயே இந்தத் திருட்டு சம்பவம் நடைபெற்றுள்ளது.

என்னென்ன பொருள்கள் திருட்டுப் போயின என்ற தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், இதுவரை எவரும் இதுதொடர்பாக கைது செய்யப்படவில்லை.

வீனஸ் வில்லியம்ஸ் தனது சகோதரி செரீனா வில்லியம்ஸுடன் சேர்ந்து இந்த வீட்டை வாங்கியுள்ளார், இதன் மதிப்பு சுமார் 23 லட்சம் டொலராகும்'' - எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், பத்திரிகைகளில் செய்தி வெளியான பின்னரே, பொலிஸார் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட்

# முதல் இன்னிங்ஸில் சுருண்ட இந்தியா பின்னர் தற்காப்பு நிலைமைக்கு மீண்டது!



இலங்கைக்கு எதிராக கொல்கத்தா ஈடன்கார்டன் மைதானத்தில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களில் சுருண்டு பின்னடைவைக் கண்ட இந்தியாவை, அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ராகுலும் தவானும் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் மிக நிதானமாகவும், பொறுமையாகவும் விளையாடி, பாதுகாப்பான கட்டத்துக்குக் கொண்டு வந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் முடிவுற்ற போது இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸின் ஒன்பது விக்கெட்டுகள் கையில் இருக்க 49 ஓட்டங்கள் முன்னிலை என்ற தற்காப்பு நிலைமைக்கு முன்னேறி இருந்தது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றிருந்த இலங்கை இந்தியாவைத் துடுப்பெடுத்தாட அழைத்திருந்தது.

இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 172 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து சுருண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை முதல் இன்னிங்ஸில் 294 ஓட்டங்களைப் பெற்று 122 ஓட்டங்களினால் முன்னிலை பெற்றது.

நேற்று நான்காவது நாள் தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இந்தியாவின் தொடக்க துடுப்பாட்ட வீரர்கள் ராகுலும் தவானும் மிக நிதானமாக ஆடினர்.

நேற்று ஆட்டம் முடிவுற்ற போது இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எஸ்.தவான் 116 பந்துகளை எதிர்கொண்டு 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ராகுல் 73 ஓட்டங்களுடனும், புஜரா இரண்டு ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும்.

**ஓட்ட விவரம்**

இந்தியா:- 172 மற்றும் ஒரு விக்கெட் இழப்புக்கு 171.

இலங்கை:- 294.

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றபரிசளிப்புவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

கல்வி அமைச்சில் இராஜாங்க அமைச்சருக்கான அதிகாரங்கள் முறையாக வழங்கப்படுவதில்லை என நான் கடந்த வாரத்தில் பத்திரிகையாளர் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்திருந்தேன்.

எனது அதிகாரங்கள்எனக்கு முறையாக வழங்கப்பட்டிருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துகின்றபோது நான் பல சவால்களை கடந்த காலங்களில் சந்திக்கவேண்டியிருந்தது.

இதனைத் தொடர்ந்து முன்னெடுக்கமுடியாது என்ற சூழ் நிலையிலேயே நான் இதனை ஊடகங்களுக்குத் தெரிவிக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டது.

கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாகவும், அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும், ஆராய்ந்து பார்க்க வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கின்றது.

அந்த வகையில் தமிழ் பாடசாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகள், தேவைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளும்,அதிபர்களும்,பெற்றோர்களும் எனது காரியாலயத்தை நோக்கி வருகின்றார்கள்.

அப்போது அதனைத்தீர்த்து வைக்கவேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அதற்கு அதிகாரம் தேவை. கொடுத்த அந்த அதிகாரங்கள் எழுத்தளவில் மாத்திரம் இருப்பதால் எதனையும் செய்ய முடியாது.

அது செயற்பாட்டில் இருக்க வேண்டும். இதற்குப் பல வழிகளிலும் அதிகாரிகள் முட்டுக்கட்டை போடுகின்றமையை நான் உணர்ந்திருந்தேன், எங்களுடைய அமைச்சர் மிகவும் திறமையாகக் கல்வி அமைச்சை முன்னெடுக்கின்றார் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால் எங்களையும் அதே அளவில் செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை அவர் வழங்கவேண்டும், அதனை அதிகாரிகளுக்கும்அவர்அமைச்சர் என்ற முறையில் தெளிவுபடுத்தவேண்டும். குறிப்பாகத் தமிழ்ப் பாடசாலைகளுக்கான அதிகாரிகள் நியமனம், அதிபர்களின் நியமனம், ஆசிரியர்கள் நியமனம், பாடசாலைகளில் நிலவுகின்ற பல்வேறு விதமான ஆளனி நியமனங்கள், இடமாற் றங்கள் தொடர்பாக என்னுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

அவ்வாறுசெய்கின்றபோதே அந்த விடயங்களைத் தமிழ் பிரிவிற்கு மிகவும் சிறப்பாக முன்னெடுத்துச்செல்லமுடியும். அப்படி இல்லாவிடில் பல முரண்பாடுகள் ஏற்படுவதற்கு அது வழி வகுக்கும்.

கல்வி இராஜாங்க அமைச்சராக, ஒரு தமிழராக நான் இருந்து கொண்டு அந்தச் செயற்றிட்டங்களைச் செய்யாவிட்டால் யார் அதனை செய்வது? - என்றார் அவர்.

## 11 முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண் பகல் 12.00 மணி வரை வேட்பு மனு ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த திகதி அடங்கிய வர்த்தமானிஅறிவித்தல் எதிர்வரும் 27ஆம்திகதிவெளியிடப்படவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்டஇடைவெளிக்குப்பின்னர் தமிழ் மக்கள் இம்முறை இந்தமாவீரர்தின நிகழ்வுகளை சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்குத் தயாராகி வருகின்றனர்.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் இம்முறை மாவீரர் துயிலும் இல்லங்களில்நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட் டுள்ளன. அத்துடன் புலம் பெயர் மக்களும் மாவீரர் தினத்தை உணர்வுடன் அனுஷ்டிக்கத் தயாராகியுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் தமிழர் தாயகத்தில் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினரால் இடித்தழித்து நிர்மூலமாக்கப்பட்டன. சில இடங்களில் துயிலும் இல்லங்கள் அமைந்திருந்த பகுதிகளை இராணுவத்தினர் கைப்பற்றித் தமது முகாம்களை அமைத்துள்ளனர்.

இந்நிலையில், இம்முறை மாவீரர்தினமான எதிர்வரும்27 ஆம் திகதி துயிலும் இல்லங்களில்சுடரேற்றிமாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மாவீரர் தின ஏற்பாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தால் இடித்தழிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்து சீரமைக்கும் பணிகளில் கடந்த இருவாரகாலமாகமக்கள்மும்முரமாக ஈட்டுபட்டனர். இதன்போது சில இடங்களில் படையினரால் முட்டுக்கட்டைகளும்போடப்பட்டன.

வடக்கில்யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட் டங்களிலும், கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோ ணமலை மாவட்டங்களிலும் உள்ள துயிலும் இல்லங்கள் மக்களால்துப்புரவு செய்யப்பட்டு மாவீரர் தின நினைவேந்தலுக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

இறுதியாகக் கடந்த 2008 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னிப் பெருநிலப்பரப்பு இருந்த போது மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கடந்த ஆண்டிலும் சிற்சில இடங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

நாளை ஆரம்பமாகும் மாவீரர் நினைவேந்தல் வாரம் எதிர்வரும்27 ஆம்திகதிநடைபெறும் பிரதான நிகழ்வுடன் முடிவடையும்.

27ஆம் திகதி மாலை 6.05 மணியளவில் துயிலும் இல்லங்களில் பொதுச் சுடர் ஏற்றப்படும். அதே நேரத்தில் மாவீரர்களின் கல்லறைகளில் அவர்களது உறவுகள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்துவர்.

## இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேகர தெரிவித் தார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணம்,கோப்பாய்,மானிப்பாய்,சுன்னாகம்பொலிஸ்பிரிவுகளில்சிறப்புத்தேடுதல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாள்வெட்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு, மூன்றுபொலிஸ்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலுக்கு அமைய, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னாண்டோ தலைமையில் விசாரணைகள்முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில்நடந்தவாள்வெட்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடைய 6 பேர்கைதுசெய்யப்பட்டனர்.இவர்களிடம்நடத்தப்பட்டவிசாரணைகளின்தொடர்ச்சியாகவேஅண்மைய கைதுகள் இடம்பெற்றுள்ளன - என்றார்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் அஸ்லி நிம லன் சௌந்தரநாயகத்தின்17ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயேஅவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார். இது குறித்து அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

சமஷ்டி குறித்து யாரும் பயப்படத்தேவையில்லை.சமஷ்டியைமுதலில்அறிமுகப்படுத்தியவர்கள் சிங்களவர்கள்தான். இதை முதலில் பிரித்தானியர்களுக்குபரிந்துரைசெய்தவர்கள் கண்டியச் சிங்கவர்கள்.

இது சிங்கள மக்களுக்கு எதிரானது என எவரும் கூற முடியாது. இந்த விடயங்களை அவர்கள் பயப்படாமல் இருக்கும் வகையில் நாம் எடுத்துக் கூற வேண்டும்.

ஒருநாட்டின்அரசமைப்புமக்கள்பார்த்து பயப்படும் ஒன்றாக இருக்க கூடாது. சொற்களைக் கண்டுபயந்தால்அந்தச்சொற்களைத் தள்ளி வைத்துவிட்டு உள்ளடக்கங்களைப் பார்க்க வேண்டும். 70 ஆண்டுகளாக எமது மக்களின் அபிலாசைகளாக இருந்த எங்களை எமது மாநிலத்தில் ஆட்சி செய்கின்ற அதிகாரம் இருக்கிறதா இல்லையா எனப் பார்க்க வேண்டும்.

எங்களுடைய மக்களின் அடிப்படை விடயங்கள் இடைக்கால அறிக்கையில் மறுக்கப்பட்டுள்ளன என எவராலும் கூற முடியாது. நாங்கள் தற்போது அரைவாசித் தூரம்தான் வந்துள்ளோம்.

இது காலவரை நாங்கள் இழந்த இழப்புகளுக்கு மாற்றீடாக ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வருகின்ற சந்தர்ப்பத்தை நாங்களே மழுங்கடித்து எங்கள்தலையில்நாங்களேமண்ணைப் போட வேண்டும் என்று சொல்லுகின்றவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் - என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புக்கு அமைவாக நாட்டை இரண்டாகப் பிளவுபடாது ஒன்றிணைந்த நாடாக முன்னெடுப்பதற்கும் தேசியக் கொடியின்கௌரவத்தைப்பாதுகாத்தும்தெற்குமற்றும்வடக்கில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர்உறுதியுரைசெய்துகொண்டுள்ளனர்.

இதற்கு மாறாகச் செயற்படுபவருக்குஎதிராகச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசமைப்பில் இடம் உண்டு. இதனால்வடக்குமுதலமைச்சர், வடக்குமாகாணஅமைச்சர்கள், பொது மக்கள் மத்தியில் ஐக்கியத்தைமுன்னெடுத்துக்கல்வி கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இன மத வேறுபாடு இன்றிச் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் மாணவர்களின் பரிசளிப்புநிகழ்வில்நடந்துகொண்ட முறையை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. இவ்வாறான நிலை மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு முதலமைச்சரும், மாகாண சபை அமைச்சர்களும் செயற்படவேண்டும்.

வடக்கில்போருக்குப்பின்னர் அங்குள்ள மக்கள் தற்போது சுதந்திரமாக வாழ்வதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதற்காக சகலவற்றையும் அரசு செய்துள்ளது. 30 வருட காலப் போரை நிறைவு செய்து பெறப்பட்டசுதந்திரத்தின்மூலம் இன்றுவடக்குமக்களேபெரிதும் நன்மைஅடைகின்றனர்.எனவே இதனை தொடர்ந்தும் வலுப்படுத்த வேண்டும் - என்றார்.

## பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்.

அவரின்சாட்சியத்தைநேரடியாகசட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவே நெறிப்படுத்துவார்.

பிரதமரின் சாட்சியத்தை நெறிப்படுத்துவதற்காக விசாரணைக்குழு முன் பிரசன்னமாகும்படி தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பதை சட்டமா அதிபர் உறுதிப்படுத்தினார்.

"ஜனாதிபதிக்கு அடுத்து பிரதமரே நாட்டின் இரண்டாவது பிரஜை. அவருக்கு உரியமதிப்பு நெறிமுறையின்அடிப்படையில் அவரிடம் கேள்விகளை முன்வைப்பதற்காகநான்அழைக்கப்பட்டுள்ளேன்."- என்றார் சட்டமா அதிபர்.

இந்தவிசாரணை ஆணைக்குழு முன் ஆஜரான ஏனைய சாட்சிகள் அனைவரிடம் அரசுத்தரப்பில் - சட்டமா அதிபர் சார்பில் - சிரேஷ்ட மேலதிக சொலிஸிட்டர்ஜெனரல்தப்புலடிலிவேராவே கேள்விகளை எழுப்பியிருந்தார்.

பிரதமரிடம் மட்டும் கேள்விகளை எழுப்புவதற்காக சட்டமா அதிபரே நேரடியாக அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த விசாரணை தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கா, அமைச்சர்கள் மலிக் சமரவிக்கிரம, கபிர் காசிம் ஆகியோர் ஏற்கனேவே சாட்சியமளித்திருந்தனர்.

நாட்டில் பதவியிலிருக்கும் பிரதமர் ஒருவர் இவ்வாறு சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகப் பேசப்படுகின்றது. (உ)

## மின்னல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னந்தன் வஸ்கின் (வயது 13) என்றசிறுவன்வயலில்வேலை செய்துக் கொண்டிருந்த தனது தந்தைக்கு மதிய உணவு எடுத்துச் சென்றுள்ளன. இதன்போதே மின்னல் தாக்கிச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சிறுவனின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் உடற்கூறு பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (112)

## தேசியக் கொடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுயவை வருமாறு:-

தேசியக் கொடி என்பது ஒரு நாட்டின்மக்களை அடையாளப்படுத்துகின்றது. மக்களுள் முரண்பாடுகள் இருக்கலாம். கட்சிகளுள் வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் அதை வைத்துத் தேசியக்கொடி பிரதிபலிக்கும் மக்களை உதா சீனம் செய்யக் கூடாது. சர்வேஸ்வரனின் ஆதங்கம் எனக்கும் இருந்து வந்துள்ளது. றோயல் கல்லூரியின் சிரேஷ்ட போர்ப் பயிற்சிப் பள்ளி மாணவன் (Cadet) என்ற முறையில் 1959 ஆம்ஆண்டுசுதந்திர தினவிழாவில் கலந்து கொண்டதன் பின்னர்எந்தஒருசுதந்திரனவிழாவிலும் நான் கலந்து கொள்ளவில்லை. நீதியரசராக இருந்த போது அழைப்பிதழ் கிடைத்தும் நான்கலந்துகொள்ளவில்லை. பிரதம நீதியரசர் சர்வானந்தா வலிந்து என்னை அழைத்த போதும் நான் பங்குபற்றவில்லை. காரணம்ஆங்கிலேயரிடமிருந்து நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தாலும் சிங்கள ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. சென்ற வருடம் பெப்ரவரி மாதத்தில் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் சுதந்திர தின விழாவில்கலந்துகொள்ள இரா.

பக்கம் 03 »

## காலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

வன்முறைநடந்தஇடத்துக்கு நேற்று நேரில் சென்ற பிரதமர், பாதிக்கப்பட்ட மக்களிடம் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறை காரணமாக முஸ்லிம்களின் சொத்துக்களுக்குப் பாரிய சேதம் ஏற்பட்டது.

இரண்டு பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையுடன், பெற்றோல் குண்டு வீச்சுகளும் இடம் பெற்றன.

இந்த நிலையில் நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நேரில் சென்று மக்களைச் சந்தித்துக்கலந்துரையாடியுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பில் அரசு பாரபட்சமற்ற விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளைத் தண்டிக்கும் எனப் பிரதமர் மக்களிடம் உறுதியளித்தார்.

பிரதமரின் இந்த விஜயத்தின்போது அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, சாகல ரட்நாயக்க ஆகியோரும் உடனிருந்தனர்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துக்கைதுசெய்யப்பட்டார்.

வீதிக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில்சோதனையிட்ட போதே இவர் கைது செய்யப்பட்டார். மருதங்கேணியைச் சேர்ந்த 45 வயதுடையவரே இவ்வாறு கைதானார். அவர் பயணித்தமோட்டார்சைக்கிளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

காங்கேசன்துறைக்கடற்பரப்பில் மிதந்து கொண்டிருந்த 55 கிலோகஞ்சாநேற்றுமீட்கப்பட்டது. காங்கேசன்துறை கடற்படையினரே கஞ்சாவை மீட்டனர் எனவும் சந்தேக நபர் எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட கஞ்சாப் பொதியைக்காங்கேசன்துறைப்பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையில் 36 கிலோ கேரள கஞ்சாவுடன், யாழ் - கொடிகாமத்தில் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கஞ்சா விற்பனைசெய்யப்படுவதாக, கொடிகாமம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேக நபர்கள்கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 19 வயதுடைய இளைஞர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றில்ஆஜர்படுத்தநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

# மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடுகளில் கையெழுத்திட இலங்கைக்கு ஜெனீவாவில் கடும் அழுத்தம்

ஜெனீவா,நவ.20

தெளிவான காலவரம்புடன் கூடிய போர்க்குற்ற விசாரணைக்கான பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்றும், அனைத்துலகக் குற்றவியல் தொடர்பான ரோம் உடன்பாடுகளிலும், சித்திர வதைகளுக்கு எதிரான பிரகடனத்திலும் கையெழுத்திடவேண்டும் என்றும் இலங்கை யிடம் அனைத்துலக சமூகம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான மூன்றாவது பருவகால, பூகோள கால மீளாய்வு அமர்வு கடந்த 15ஆம் திகதி நடை பெற்றிருந்தது. இந்த அமர்வில் உலக நாடுகளால் மேற்படி விடயங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் வலியுறுத்தப்பட்டன. (ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் குறித்தே பல நாடுகளும் வலியுறுத்தின)

அங்கு ஒவ்வொரு நாடும் இலங்கை தொடர்பாக வெளியிட்ட கருத்துகளின் சாரம் வருமாறு:-

**ஜோர்ஜியா** - இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான காணிகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண காணி சட்டங்களை மீளாய்வு செய்ய வேண்டும்.

**ஜேர்மனி** - 30/1 தீர்மானத்தை முழுமையான கால வரம்புடன் நடைமுறைப்படுத்த வேண்டும். சுதந்திரமான உறுப்பினர்களுடன், காணாமல்போனோர் பணியகத்தைச் செயற்படுத்த வேண்டும்.

**கானா**- வடக்கு, கிழக்கில் பெருமளவு காணிகளைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக வழங்குவது பற்றி ஆலோசிக்க வேண்டும்.

**ஹெய்டி** - புதிய அரசமைப்பு போதுமானளவு அதிகாரங்களைப் பகிரும் வகையில் அமைய வேண்டும்.

**கனடா**- பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத் தலையீடுகள் நிறுத்தப்பட வேண்டும், பொதுமக்களின் காணிகள், மீளக் கையளிக்கப்படவேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்துக்கு அதிகமாகப் பணியாற்ற வேண்டும்.

**இந்தியா**- 13 ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உறுதி செய்யப்பட வேண்டும்.

**இந்தோனேஷியா**-சித்திரவதைகள் தொடர்பான சகிப்பற்ற தன்மை மற்றும் மேலதிக சம்பவங்களைத் தடுப்பதற்கு நிறுவக ரீதியான கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும்.

**ஈரான்** - குற்றப்புலனாய்வுப் பிரிவு, இராணுவம், பொலிஸின் தடுப்புக்காவலில், இடம்பெறும் சித்திரவதைகளை தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**ஈராக்**- சட்டத்தில் உள்ள - பெண்களுக்கு எதிரான- எல்லா பாகுபாடுகளையும் நீக்க வேண்டும்.



**அயர்லாந்து** - ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்துக்கு அமைய, இழப்பீட்டுக்கான பணியகம் ஒன்றை அமைக்கும் நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

**இத்தாலி**- சுதந்திரமான விசாரணை அமைப்பு ஒன்று, காணாமல்ஆக்கப்பட்ட சம்பவங்கள், சித்திரவதைகள் தொடர்பான எல்லா குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**ஜப்பான்**-நல்லிணக்க செயல்முறைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு உதவ, எமது சிறப்பு சட்டவாளரை வழங்குகிறோம்.

**லத்வியா**- ரோம் பிரகடனத்திலும், அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற உடன்பாட்டிலும் இலங்கை கையெழுத்திட வேண்டும்.

**மடகஸ்கார்**-சித்திரவதைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகளைத்தண்டிக்கும் உறுதியான நீதிப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

**மலேசியா**-பாலின வன்முறைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வளங்களை ஒதுக்க வேண்டும்.

**மாலைதீவு** - பெண்களுக்கு எதிரான எல்லா வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

**மெக்ஸிக்கோ**- அனைத்து சமூகங்களுக்கும் சம உரிமைகளை உறுதிப்படுத்தும், அரசமைப்பு மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர வேண்டும். நிலைமாறுகால நீதி செயல்முறைகளின் வேகம் அதிகரிக்க வேண்டும்.

**மொன்ரனிக்ரோ** - தற்போது நடைபெறும் சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். பாதுகாப்புப் படையினரின் சித்திரவதைகள், பாலியல் மீறல்கள் தீவிர கவலையளிக்கின்றன.

**மியான்மார்** - தேசிய மனித உரிமைகள் செயற்றிட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

**நமீபியா**- அரசமைப்பு மறுசீரமைப்பு மூலம், அதிகாரப் பகிர்வுக்கு முயற்சிக்கும் சிறிலங்காவை வரவேற்கிறது.

**நெதர்லாந்து**- அரசமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நிலைமாறுகால நீதி செயல்முறைகள் மெதுவாகவே முன்னெடுக்கப்படுகின்றமை கவலையளிக்கிறது.

**நியூஸிலாந்து**- 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ந்து முயற்சிக்க வேண்டும்.

**நிக்கரகுவா**- முன்னாள் போராளிகளுக்கான மீள்குடியேற்ற மற்றும் இருப்பிட வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நோர்வே**- ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை தெளிவான கால வரம்புடன் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பிலிப்பைன்ஸ்**-மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தேவையான நிதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

**போலந்து**- மத ரீதியான வன்முறைகளைத் தூண்டுவோரை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறைகளுடன் இணங்க வேண்டும்.

**போர்த்துக்கல்**-தடுப்புக்காவலில் சித்திரவதைகள் நடக்காமல் தடுப்பதை உறுதிப்படுத்த வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறைகளுடன் இணங்க வேண்டும்.

**தென்கொரியா** - காணாமற்போனோருக்கான பணியகம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு பொருத்தமான வளங்களை அளிக்க வேண்டும்.

**ரஷ்யா** - தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உருவாக்கம் வரவேற்கத்தக்கது.

தமிழர்களுக்கான பிரித் தானிய நாடாளுமன்றக்குழு - சித்திரவதைகள், குறித்து ஐ.நா விசாரணை நடத்த வேண்டும்.

**சேர்பியா**- பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, அனைத்துலக சட்டங்களுக்கு அமைவான புதிய சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

**ஸியராலியோன்** - ஆயுத மோதல்களுடன் தொடர்புடைய வழக்குகளில், நீதித்துறைத் தீர்வுகளை வழங்குவதற்கு விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டும்.

**சுலோவாக்கியா**-சித்திரவதைகள், காவல்துறை வன்முறைகள் பற்றிய அறிக்கைகள் கவலையளிக்கின்றன.

**ஸ்லோவேனியா**-ரோம் பிரகடனத்திலும், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திலும் இணைந்து கொள்ள வேண்டும். அனைத்துலக நிபுணர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய பொறுப்புக்கூறல் பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

**தென்னாபிரிக்கா**- அரமைப்பு மறுசீரமைப்பையும், விரிவான நிலைமாறுகால நீதி பொறிமுறையையும் உருவாக்க வேண்டும்.

**ஸ்பெய்ன்**- பலவந்தமாகக் காணாமல் போகச் செய்வதை குற்றவியல் சட்டத்தில் குற்றமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

**பலஸ்தீனம்**- ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**சுவீடன்**- பலவந்தமாக காணாமல் போகச் செய்வதை ஒரு குற்றமாக, இலங்கையின் குற்றவியல் சட்டக்கோவையில் சட்டமாக்க வேண்டும்.

**சுவிற்ஸர்லாந்து**- சிவில் மற்றும் பொருளாதார விவகாரங்களில் இராணுவத் தலையீடுகள் இல்லாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். காணாமற்போனோர் பற்றிய முன்னைய எல்லா அறிக்கைகளும் வெளியிடப்பட வேண்டும். காணாமற்போனவர்கள் பற்றிய உறுதியான பட்டியலை வெளியிட வேண்டும்.

**மசிடோனியா**- இலங்கையின் வடக்கில் அதிகரித்துள்ள எதிர்ப்புப் போராட்டங்கள், அங்கு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் போன்றவற்றில் முன்னேற்றங்கள் இல்லாதிருப்பதையும், விரக்தியையும் வெளிப்படுத்துகின்றன. 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான குழப்பமற்ற காலவரம்பை பொருத்தமான வளங்களுடன் உருவாக்க வேண்டும்.

**கிழக்கு திமோர்**- ரோம் உடன்பாட்டிலும், அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற உடன்பாட்டிலும் இணைய வேண்டும்.

**பிரித்தானியா**- 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான காலவரம்புடன் கூடிய செயற்றிட்டத்தை உருவாக்க வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறைகளுடன் இணைந்து கொள்ள வேண்டும். ரோம் உடன்பாட்டிலும், அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற உடன்பாட்டிலும் இணைய வேண்டும்.

**அமெரிக்கா**- மத வன்முறைகளுக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டும். 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டத்தை தயாரிக்க வேண்டும். பாதுகாப்புப் படைகளால் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களுக்கு பொறுப்புக்கூறுகின்றமையை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கையில் தொடரும் பாதுகாப்புப் படைகளின் மீறல்கள் மற்றும் மத வன்முறைகள் பற்றிய அறிக்கைகள் கவலையளிக்கின்றன.

**உருகுவே** - சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**ஆப்கானிஸ்தான்**-சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**ஆஜென்ரீனா**- ஆயுத மோதல்களின்போதான உரிமை மீறல்கள் குறித்த தொடர் விசாரணைகள், பொறுப்புக்கூறல் மற்றும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு வழிவகுக்கும்.

**ஆஸ்திரேலியா** - பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். நல்லிணக்கம், நிலைமாறுகால நீதி என்பனவற்றை சிறிலங்கா நிறைவேற்றுவது, நீண்டகால உறுதிநிலையை உறுதிப்படுத்தும்.

**ஒஸ்ரியா**- பொதுமக்கள் விவகாரங்களில் இராணுவத் தலையீடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். இராணுவத்திடம் உள்ள பொதுமக்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும், காலவரம்புடன் கூடிய செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் விரக்தி அதிகரித்து வருகிறது. ரோம் உடன்பாட்டில் இணைந்து கொள்ள வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிரான நெறிமுறையில் இணைய வேண்டும். சித்திரவதைகள் தொடர்கின்றமை கவலையளிக்கிறது. காணாமல் ஆக்கப்படுவதை குற்றமாக்குவதற்கான கால வரம்பைத் தெரியப்படுத்த வேண்டும்.

**பெல்ஜியம்** - மத சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான முயற்சிகள் அதிகரிக்கப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் தடுப்பதற்கான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும்.

**பிரேஸில்** - உண்மை, நீதி, இழப்பீடு, மீள நிகழாமையை ஊக்குவிப்பதற்கு மேலதிக முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

**சீனா**- மனித உரிமைகள் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும்.

**டென்மார்க்**- சித்திரவதைக்கு எதிரான விருப்பநெறிமுறையை உறுதிப்படுத்த வேண்டும். 30/1 தீர்மானத்தை, நடைமுறைப்படுத்துவதற்கு தெளிவான காலவரம்புடன் கூடிய திட்டத்தை வகுக்க வேண்டும்.

**எஸ்தோனியா**- ரோம் உடன்பாட்டுக்கு இணங்க வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும். போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதற்கான விரிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

**பின்லாந்து** - எவ்வாறு 30/1 தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது என்பது குறித்த வீதி வரைவு ஒன்றுடன் கூடிய காலவரையறையைத் தயாரிக்க ஊக்கமளிக்கிறது. (உ)

# வடிகாலமைப்பு முறைமைத் தவறுகளே குடாநாட்டில் வெள்ளத்துக்குக் காரணம்

## புவியியல் சூழல் மாற்றம் காரணம் அல்ல என விளக்கம்

கொழும்பு, நவ.20

அண்மைய மழையின் போது, யாழ். குடாநாட்டில் பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டமைக்கு, கடல்நீரேரியின் நீர்மட்டம் அதிகரித்தமை காரணம் அல்ல. வடிகாலமைப்புகளில் உள்ள தவறே காரணம் என இடர்முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அண்மையில் குடாநாட்டில் பெய்த தொடர் மழையினால், பல இடங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், யாழ். குடாநாட்டின் புவியியல் அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனவும், இன்னும் சில ஆண்டுகளில் குடாநாடு நீரில் மூழ்கி விடும் என்றும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

புவியியல் நிபுணர்கள் என்று மாத்திரம் அடையாளப்படுத்திக் கொண்டவர்களால், குடாநாட்டின்புவியியல்சூழல் குறித்து மக்கள் மத்தியில்பீதியை ஏற்படுத்தும் தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், அண்மைய மழையின் போது,யாழ்.குடாநாட்டில் வெள்ளம் ஏற்பட்டமைக்கு, வடிகாலமைப்புகளில் ஏற்பட்ட அடைப்பே காரணம் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப்பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

அவர்மேலும்கருத்து வெளியிடுகையில், மழை நீர் அந்தப் பகுதியில் தடைப்பட்டமையே வெள்ள நிலைமைக்கு முக்கிய காரணம். அண்மைய மழையினால், கடல்நீரேரியின் நீர் மட்டமோ, அந்தப் பகுதி குளங்களின் நீர் மட்டமோ அதிகரிக்கவில்லை என்றார்.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் யாழ்ப்பாண செயலக உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி இதுதொடர்பாகக்கருத்து வெளியிடுகையில் -

நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுகளில் சில பகுதிகளிலும், யாழ். நகரில் கரையோரப் பகுதிகளிலும் இன்னமும் வெள்ளப்பாதிப்பு உள்ளது. தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் இன்னமும் பாதிக் கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 100 மி.மீ இற்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வெள்ளம் ஏற்பட்டமைக்கு இந்தப் பிரதேசத்தில் உள்ள தவறான வடிகாலமைப்புமுறையே காரணம். வடிகால்களில் குப்பைகளைப்பொதுமக்கள் வீசியமையால், அவை அடைப்பை ஏற்படுத்தியுள்ளன. எதிர்காலத்தில் இது போன்ற நிலை ஏற்படாமல் தடுப்பதற்குரியவிழிப்புணர்வு நடவடிக்கைமேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.











கொழும்பு, புதுச் செட்டித் தெருவில் அமைந் துள்ள சீரடி சாயி பாபா (துவாரக மாயி) ஆலயத் தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபத் திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நாடாவை வெட்டி, மண்டபத்தை திறந்து வைக்கின்றமையையும், சாயி பாபா மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியா வதைக் குறிக்கும் ஞாபகார்த்த சின்னத்தை திரை நீக்கம் செய்கின்றமையையும், அருகில் சீரடி பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதய நாயகன், பிரார்த்தனைமண்டஸ்தாபகர் கே.பி. பாலநாயகம், அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், மேல் மாகாண சபை உறுப்பினர் கே.ரி. குருசாமி, சாயி மத்தியநிலையமகளிர்சங்கத் தலைவிதிருமதிசிவாசண்முகநாதன் ஆகியோர் நிற்கின்றமையை யும், சீரடி மந்திர் முகப்புத் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.



மாத்தளை ஹாமீனா தேசியற் கல்வியியற் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## ஜிந்தோட்டைப் பிரதேசத்தில் நேற்றும் பாதுகாப்புத் தீவிரம்

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற காலிஜிந்தோட்டைபிரதேசத்தில் நேற்றும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அப்பிரதேசத்தில் தற்பொழுது 74 இராணுவத்தினரும், 102 கடற்படையினரும், வெளியிடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டபொலிஸ் உறுப்பினர்கள் 428 பேரும்சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் காலி மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர்களானசாகலரத்னாயக்க, கயந்த கருணாதிலக்க ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் பொலிஸார்கிந்தொட்ட அசம்பாவிதத்தில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் வழங்கியுள்ளனர்.

இதன்படி, சேதமடைந்த வீடுகள் - 66 எனவும், சேதமடைந்த வியாபார நிறுவனங்கள் - 26 எனவும், 2 பள்ளிவாசல்கள்சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன், பாதையில், வீடுகளில்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 வாகனங்கள்சேதமாக்கப்பட்டுள்ளனஎனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் இதுவரை 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவத்தில் ஐவர் காயமடைந்த நிலையில்கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (உ)

## ஆடம்பரப் பொருள்களுக்கு 15 சதவீத பெறுமதிசேர் வரி

மூக்குக் கண்ணாடிகள், ஆடைகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கு 15 சதவீத பெறுமதிசேர் வரி அறவிடப்படவுள்ளது. இந்த மாற்றம் வரும்ஏப்ரல் முதலாம் நடைமுறைக்கு வரும்என வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. அதனால் அவற்றின் விலைகள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண் வில்லைகள் (லென்ஸ்கள்), கண்ணாடி வில்லைகள், மூக்குக்கண்ணாடிப் பிரேம்கள் மற்றும் சண்கிளாஸ்களின் விலைகள் ஏப்ரல் முதலாம் திகதி அதிகரிக்கும். தற்போது சாதாரண மூக்குக் கண்ணாடிகள் 3 ஆயிரத்து 500ரூபாவுக்குவிற்பனை செய்யப்படுகின்றன. அவற்றின் விலை 500 ரூபாவால் அதிகரிக்கும்.

40 வயதுக்கு மேற்பட்டவர்களில் பலர் தற்போது மூக்குக் கண்ணாடி பயன்படுத்துகின்றனர்.

தரம் குறைந்த கண்ணாடி வில்லைகள் தற்போது இங்கு சட்டவிரோதமாகத் தருவிக்கப்படுகின்றன. விலை குறைவான, தரமற்றவில்லைக்களைப் பயன்படுத்துவதனையே பலர்விரும்புவர். அதனால் பலருக்குக் கண் பார்வை இழப்பு ஏற்பட அது வழிவகுக்கும் எனக் கண் வில்லைகளை இறக்குமதி செய்யும் நிறுவனத்தின் அதிகாரிஒருவர்கூறினார்.

ஆடம்பரக் கைக்கடிகாரங்கள் மீது பெறுமதிசேர் வரி மீளவும் சுமத்தப்படுவது அவற்றின் விற்பனையைக் குறைக்கும். ஆடம்பரமற்ற கைக்கடிகாரங்களில் எந்த மாற்றமும் ஏற்படாது என கடிகாரங்களை இறக்குமதி செய்யும் மொகமட் றிகாம் தெரிவித்தார்.

சிறிய ரக கார்கள் மீதான வரிக் குறைப்பு கவலையளிக்கின்றது. இதனால் வீதிகளில் போக்குவரத்துநெரிசல்ஏற்படும். அத்துடன் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் குறைவடையும்.

நாட்டில் அதிக போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுக்காமல் பயணிகள் பஸ்களுக்குக்கார்பன்வரி விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனை நாம் எதிர்க்கின்றோம் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் ஹெமுணு விஜயரட்ண கூறினார்.

## சாட்டி துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி ஆரம்பம்

மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக தீவக மாவீரர் தினசெயற்குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு சிரமதானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர் வரும்நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை உரியவகையில் அனுஷ்டிக்கும் முகமாகவே இச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இச்சிரமதான நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாக யாழ்.தீவக மாவீரர்களின் பெற்றோர் மற்றும்உறவினர்கள், முன்னாள் போராளிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், பொதுமக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டு, இத் துயிலும் இல்லத்திலும் மாவீரர் தின அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற ஒழுங்கு களை செய்து கொண்டனர்.

இத் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்ட மாவீரர்களின் நடுகற்கள் உள்ளிட்ட துயிலுமில்ல கட்டமைப்புக்கள் யாவும் இராணுவத்தினரால் ஏற்கனவே அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**கடை விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் ஜும்மா மொஸ்க் லேனில் கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு:- 077 157 4033

**கடை விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் கஸ்தூரியார் வீதியில், முதலாம் மாடியில் வீதிக்குத் துலக்கமான பார்வையுடன் 450 சதுர அடி விஸ்தீரணமுள்ள கடை, மலசலகூடம், சிறிய களஞ்சியஅறை ஆகிய வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு:- 078 301 7454

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.